# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:5


## எனது மகன்

கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள்,
கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள்,
மீண்டும் மீண்டும் அவனைக் கொன்றனர்,

பனிபடர் மலைகளின் உச்சிகளிலும்,
வெண்மணல் பாலை வெளிகளிலும்
சந்தடி மிகுந்த தெருக்களிலும்,
நாகரிகம் முதிர்ந்த நகரங்களிலும்,
கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள்.

ஆனால் அவனோ உயிரோடிருக்கின்றான்,
ஆனால் அவனோ உயிர் பெற்றெழுகின்றான்,
சிந்தும் இரத்தச் சிதறல்களிலும்
உயிருடன் அவனே.

நானே அவனை நன்கு அறிந்தவள்
உங்களை விடவும்
நானே அவனை நன்கு அறிந்தவள்
என்னால் மட்டுமே எனது மகனை
உங்களைவிடவும் இனம் காணமுடியும்

எனது விழிகளின் பார்வையைப் போல,
எனக்குள் அவனே நிறைந்திருக்கின்றான்.

எங்கே விலங்குகள் உடைபடுகின்றதோ,
எங்கே எதிரிகள் வீழ்த்தப் படுகின்றனரோ,
அங்கே நீங்கள் அவனைக் காணலாம்
அங்கே என்மகன் உயிர் வாழ்கின்றான்.

நம்புங்கள் என்னை நானொரு அன்னை
என்றும் அன்னை தவறிழைப்பதில்லை.

அதுவே உண்மை—அவனே வெல்வான்!
அவனே வெல்வான்!!
அவனே வெல்வான்!!!

(ஒரு பாலத்தீனியக் கவிதையின் மொழியாக்கம்)

பொதுமை


1983 பங்குனி.


கொடு தலை! கொடு உயிர்! விடுதலை தமிழ்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

## போர்க்காலம்

வணக்கத்துக்குரிய பிதாக்களும், அறிஞர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், பல நூறு தமிழ் இளைஞர்களும் சிங்கள அரசினால் சிறைவைக்கப்பட்டிருப்பது பழைய செய்தி! வண. பிதா சிங்கராயர் உட்பட தமிழ் இனத்தின் மதிப்புக்குரியவர்கள் சிங்களக் காவல்படையினரின் சித்திரவதைகளுக் கெல்லாம் எங்ஙனம் உட்பட்டு வருகின்றனர் என்பதே இன்று ஒவ்வொரு தமிழ் மகனினதும் செவிகளில் வெந்தணலை வாரி இறைக்கின்ற செய்தி!

தம்மை நடுநிலைப் பத்திரிக்கைகள் என்று கூறித் தம்பட்டம் அடித்துக் கொண்டு அரசுக்கு ஆலவட்டம் பிடிக்கும் இலங்கைத் தமிழ் நாளேடுகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள் சௌகரியமாக இருக்கிறார்கள் என்று கூறிவந்த பொய்க்கோலங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய சிந்தையையும் குலைக்கும் அளவிற்கு கொடுமையான சித்திரவதை நடந்திருக்கிறது என்பது ஒருபுறம் என்றால், மறுபுறம் ஆண்டுக்கணக்காக ஆக்கிரமிப்பு அரசினால் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் சிலரான குட்டிமணியும், தேவனும், தங்கத்துரையும் நடேசத்தாசனும் தங்களுக்கு நடந்த கோரத்தனமான சித்திரவதைகளை அம்பலத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்; ஒப்புதல் வாக்குமூலங்கள் எப்படி எடுக்கப்பட்டன என்பதைப் பட்டவெளிச்சமாக்கியுள்ளனர். சிறீலங்கா அரசின் இந்தக் கொடுமையும் இந்தக் கயமையும் தமிழினத்திற்கு விழுகின்ற இறுதி அடியாக இருக்கட்டும். இனிமேல் சிங்கள அரசுக்கு அடி கொடுக்கும் பொறுப்பை மொத்தத் தமிழினமும் ஏற்கட்டும்!

இதற்கு முன்னோடியாக யாழ். பல்கலைக்கழக மாணவ–மாணவியர் இடைவிடா உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். ஒருவேளை உணவைக்கூட விட்டறியாத மாணவசமுதாயம் தொடர்ந்து உண்ணா நோன்பு இருந்து போராட்டம் நடத்துகிறதென்றால் ... ஏன் அந்தப் போர்க்கோலம் மொத்தத் தமிழினத்துக்கும் வரக்கூடாது? யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எப்படித் தமது போராட்டத்துக்கு சகபல்கலைக்கழகங்களின் சிங்கள மாணவர்களின் ஆதரவைப்பெற்றார்களோ அந்தவழியில் சிறீலங்காவின் முற்போக்குச் சக்திகளது ஆதரவைத் தமிழீழ விடுதலை இயக்கங்கள் பெறவேண்டும். விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்த இஃது இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம் தணலாகிக் கொண்டிருக்கும் இந்த வேளையில்கூட தமிழர் விடுதலைக் கூட்டணி 'தார்மீகத்'துடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறது. மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்கலாமா என ஆலோசித்துக் கொண்டிருக்கிறது... உள்ளூராட்சித் தேர்தல்களில் உறுப்பினர்களை அமர்த்துவதுபற்றி அசை போட்டுக்கொண்டிருக்கிறது. போர்க் கோலம் பூணவேண்டியவர்கள் புறமுதுகைக் காட்டுகிறார்கள். சொற்சரங்களில் வாணவேடிக்கைக் காட்டியவர்கள் வாழாவெட்டிகளாக கொல்லைப்புறங்களில் பதுங்கத் தலைப்பட்டுள்ளனர்.

ஆனால், இப்போது இவர்களைப்பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. ஏனென்றால் இது போர்க்காலம்! இங்கே கூத்துக்களுக்கோ, கொம்மாளங்களுக்கோ இடமில்லை! தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தை நாம் அனுபவிக்கொண்டிருக்கிறோம். விரைவில் 'எரிமலை' வெடித்துச் சிதறும்! அனல் ஆறாக ஓடும். அதன் பாதிப்பு அனைவருக்கும் ஏற்படும். அதற்கு நாம் தயாராக வேண்டும். தமிழீழம் இன்னுமொரு பெய்ரூத்தாக ... சல்வதோராக மாறும்! எனவே போர்க்காலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு நடக்க நாம் பழகத் தொடங்க வேண்டும். சுதந்திரக் காற்றை சுவாசிப்பதென்பது எளிதான செயலா? இரத்தம் சிந்தாப்புரட்சி என்பது இந்த இருபதாம் நூற்றுண்டில் சாத்தியமா ... ?

இந்த நிலையில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் நாம் வேண்டுவது ஒன்றைத்தான்! அங்கே ... தமிழீழத்தின் ... நம் தாயகத்தில் போர்க்கால மேகங்கள் குவிய ஆரம்பித்துவிட்டன. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒவ்வொரு இளைஞனையாவது ஆக்கிரமிப்பு படைகள் இழுத்துச் செல்லும் காலகட்டம் வந்துவிட்டது. விரைவில், வீதி ஓரங்களில், கடற்கரைகளில், காடுகளில் எம்மிளைஞர்களின் சடலங்கள் காணப்படும் காலம் வந்துவிடும். இந்த நிலையில் விடுதலைப் போராட்டத்திற்கு நாம் எமது பங்களிப்பை அளிக்காது வீணே கூடி, குடித்து, உண்டு களித்திருக்கலாமா? அங்கே சிதறுகின்ற இரத்தம் இன்னும் இங்குள்ள எம்மவர்மீது படவில்லையா? எனவே தமிழீழ விடுதலை என்னும் புனிதப் போருக்கு எவ்வகையிலாவது,... ஒவ்வொரு தமிழ்மகனும் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும். இராணுவ அடிப்படையில் இயங்கும் தமிழீழ இயக்கங்களுக்கு தம்மால் முடிந்த நிதியளிப்பைச் செய்ய வேண்டும்.

போர்க்காலத்தில்கூட தாமதம் செய்தால் பிறகு எதும் மிஞ்சாது. இதனை அனைவரும் மனதில் பதிக்க வேண்டும்.

— காந்தன் —

*******************************************

"எத்தனை எத்தனைப் பேர்வந்து சொல்வது?
இழுத்து இழுத்தே துயின்றால் என்றுநீ வெல்வது?
சொத்தெலாம் போனபின் எவர்வழிச் செல்வது?
'சோம்பலை முறி' என்றால் எனையாநீ கொல்வது?"

— பாவலரேறு —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எதிரிகளின் சுதந்திர வேட்கையின் முன் தலைவணங்குகிறேன்'

## நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் சட்டத்தரணி சத்தியேந்திரா

> 'தங்கள் இன விடுதலைக்காக மனித வாழ்வின் விலைமதிக்க முடியாத, உயிரையே இந்த எதிரிகள் அர்ப்பணம் செய்யத் துணிந்துவிட்டார்கள். அவர்களின் இனத்தைச் சேர்ந்தவன் என்றவகையில் அவர்களின் சுதந்திர வேட்கையின் முன் நான் தலை வணங்குகின்றேன்'.

'இந்த வழக்கின் எதிரிகள் தமிழ் ஈழ இலட்சியத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இதனை அவர்கள் இந்த நீதிமன்றத்தில் எடுத்துக்கூறி தங்களை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்றும் வாதிட்டனர். நீதிமன்றத்தில் இப்படிக் கூறுவது எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப் பற்றிக் கூட அவர்கள் கவலைப்படவில்லை. இப்படியான பாரதூரமான விஷயங்களில்கூட ஒளிவு மறைவு இன்றி பேசிய எதிரிகள் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டதாக ஏன் பொய் கூற வேண்டும்? அவர்கள் கூறுவது முற்றிலும் கற்பனைக் கதை என்ற அரச தரப்பு வாதம் அர்த்தமற்றது'

'இந்த எதிரிகள் கூறுவது கற்பனைக் கதையென்றால் எதிரிகள் அமானுஷ்யமான கற்பனைத் திறன் உள்ள நாவலாசிரியர்களாக இருக்க வேண்டும்.

தங்களுக்கு இராணுவ தடுப்பு முகாம்களில் கையிலங்கிடப்பட்ட விதத்தையும் தாங்கள் வேதனை தாங்காது கதறிய முறையையும் இங்கு சாட்சிக் கூண்டில் சித்திரித்துக் காட்டிய இந்த எதிரிகள் திறமையான நடிகர்களாகவும் இருக்கவேண்டும்.

இந்த எதிரிகளுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துடன் உள்ள தொடர்புகளைக் கருத்தில் கொண்டு இவர்கள் நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் எதிராக எதையும் சொல்லுவார்கள் என்று நீதிமன்றம் கருதக்கூடாது. இவர்களையும் ஏனைய சாட்சிகளைப் போலவே கணிக்கவேண்டும்.

எதிரிகள் இந்த விசாரணையில் சாட்சியமளித்த போது தாம் சித்திரவதைகள் செய்யப்பட்டது பற்றி விபரமாகக் கூறினார்கள். எல்லோரும் ஒரே மாதிரியாகக் கூறினார்கள். அது கற்பனை என்று அரச தரப்பில் கூறுவதானால் ஒருவரையொருவர் சிரித்துப்பேசிக்கொண்டதற்குக்கூட வாய்ப்பளிக்கப்படாது தனித்தனியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட எதிரிகள் எல்லோர் மனதிலும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான கற்பனை தோன்றியிருக்க வேண்டும். அல்லது அவர்களின் சட்டத்தரணிகளாகிய நாங்கள்தான் அந்தக் கற்பனையை எதிரிகளுக்கு புகட்டினோம் என்று அரச தரப்பார் கூறுகின்றார்களா?

அப்படியும் இல்லையென்று அரசதரப்பார் ஏற்றுக்கொள்வதானால் இந்த எதிரிகள் சாட்சிக் கூண்டில் கூறியது உண்மையானதாகவே இருக்கவேண்டும்.

தங்களுக்குச் செய்யப்பட்ட இம்சைகளையும், கொடுமைகளையும்பற்றி யாரும் நினைத்துக் கூட பார்க்கமுடியாத பல உண்மைகளை இந்த எதிரிகள் தங்கள் கற்பனையின் திறத்தால் தான் கூறினார்களா என்பதை நீதிமன்றம் ஆராயவேண்டும்.

இந்த எதிரிகள் சாட்சிக் கூண்டில் நின்று கதறலுடன் கூறியவை இந்த நீதிமன்றத்தின் காதுகளுக்கு எட்டவில்லையென்றால் அதனால் நீதிக்குத்தான் பெரும் குந்தகம் ஏற்படும். நீதிமன்றம் சலனமில்லாத மனநிலையுடன் உண்மைகளை எடைபோட்டுப் பார்க்கவேண்டும். ஆழமாக சிந்திக்கவேண்டும்.

நடந்தது நடந்து விட்டது. எனவே இப்போது நடைமுறையைப் பற்றி சிந்திப்பதில் அர்த்தமில்லை என எவரும் நினைக்கக்கூடாது. நீதித்துறைக்கே முக்கியமான நடைமுறையைப் பற்றி அலட்சியப்படுத்தும் நீதிமன்றம் நீதிவழங்கும் தன் அதிகாரத்தை அடகு வைத்து விட்டதென்றே கொள்ளவேண்டும்.

இந்த வழக்கில் பொலிஸில் நடந்துகொண்ட முறை காட்டுமிராண்டித்தனமானது மட்டுமல்ல, அரசியல் திட்ட ஷரத்துக்களுக்கும் சட்டத்திற்கும் முரணானது.

'இந்த எதிரிகள் ஏன் கைது செய்யப்படுகிறார்கள் என்று அவர்களிடம் சொல்லப்படவில்லை. சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் அவர்களைக் கைது செய்யவில்லை. தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட போது இவர்கள் மீது தடுப்புக்காவல் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. எவ்வளவு காலம் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள் என்பது சொல்லப்படவுமில்லை. எந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்பதும் கூட சொல்லப்படவில்லை. அதிகாரமற்ற அதிகாரிகள் அவர்களை புலன் விசாரணை செய்தார்கள். வெளியுலகத்துடன் தொடர்புகள் அற்ற நிலையில் அவர்கள் புலன் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவையனைத்துமே சட்டத்திற்கு முரணானவை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் 1ஆம் உட்பிரிவில் கைது செய்யும் அதிகாரம் பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கின்றது.

சட்டத்தின் உள்ள விதியை புரிந்து கொண்டதால் [illegible]

ஆறாவது எதிரியைத் துரத்திச் சென்றதை, பிடித்து மடக்கியதை, தன் கட்டுப்பாட்டில் அவரைக் கொண்டு வந்ததை கெப்டன் மாயாதுன்னை ஏற்றுக்கொள்கின்றார். ஆனால் தான் கைது செய்யவில்லை. சப் இன்ஸ்பெக்டர் உடுகம்பலை தான் கைது செய்தார் என்று வற்புறுத்துகின்றார்.

சட்ட விரோதமாகத்தான் ஆறாவது எதிரியும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இராணுவம் கைது செய்து பலாலி இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு, இராணுவம் தடுப்புக் காவலில் வைத்திருந்த ஒரே சந்தேக நபர் விஷயத்தில் பொலிஸ் அதிகாரி ஏன் சம்பந்தப்படுத்தப்பட்டார் என்று ஒரு கேள்வி எழுகின்றது?

சட்டத்தைப்பற்றி இராணுவ கொமாண்டரும், இராணுவ மேஜரும் ஓரளவு தெரிந்து கொண்டிருந்ததனாலேயே பொலிஸ் அதிகாரி இதில் சம்பந்தப்படுத்தப்பட்டார். தாங்கள் செய்தது சட்டவிரோதமான செயல் என்று அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

'பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு மட்டுமே உண்டு. ஆனால், இந்த வழக்கின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது எதிரிகளை கடற்படை அதிகாரிகளே கைது செய்துள்ளனர். எதிரிகள் கைது செய்யப்பட்டது முதல் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டது வரை சகல நடவடிக்கைகளும் சட்டத்திற்கு முரண்பட்ட முறையிலேயே நடத்தப்பட்டுள்ளன'

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 6 (1)ஆம் பிரிவின் கீழ் எதிரிகள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக இங்கு சாட்சியமளித்த பொலிஸ் அதிகாரிகள் கூறினர். மேலும் அந்தச் சட்டத்தின் 7 (3)ஆம் பிரிவின் கீழ் எதிரிகள் புலன் விசாரணை செய்யப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 6 (1) பிரிவின்படி ஒருவரைக் கைது செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரே நபர் பொலிஸ் அதிகாரி மட்டுமே. இந்த வழக்கில் ஆறாவது எதிரியை இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் மாயாதுன்னை கைது செய்துள்ளார். முதலாம், இரண்டாம், மூன்றாம் எதிரிகளைக் கடற்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு [illegible] அவர்களுக்கு அதிகாரமில்லை.


நீர்வேலி வழக்கில்
முதலாம் எதிரி
தங்கத்துரை
இரண்டாம் எதிரி
குட்டிமணி
மூன்றாம் எதிரி
தேவன்
நான்காம் எதிரி
சிவபாதம் மாஸ்டர்

சட்டத்தரணி
சத்தியேந்திராவின்
தொகுப்புரையின்
சில பகுதிகள்

-வீரகேசரியிலிருந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கத்துக்குரிய திருத் தந்தைகளை வதைக்கிறது சிறீலங்கா அரசாங்கம்!



**சாட்டை கொண்டு எழுந்த யேசுவின் சீடர்கள் நாட்டை மீட்க எழுந்தது தவறு?**

சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசு தமிழ்மக்களுக்கெதிராகப் புரிந்து வரும் அக்கிரமங்களின் சிகரமாக வணக்கத்திற்குரிய அருட்தந்தைகளையும் அறிஞர்களையும் தடுப்புக்காவலில் வைத்துவருவது தெரிந்ததே! இவ்வக்கிரமங்களுக்கெதிராக தமிழீழத்தின் மூலை முடுக்கெங்கும் இலட்சக்கணக்கான மக்கள் அறப்போராட்டங்களில் ஈடுபட்டுவருவதும் தொர்கிறது. ஆனால் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காத ஆக்கிரமிப்பு அரசும் அதன் படைகளும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்க்ள்மீது கடும்சித்திரவதைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன.

வண. பிதா சிங்கராயரும் மற்றவர்களும் பலவகைத் துன்பங்களுக்கும் உள-உடல் துன்புறுத்தல்களுக்கும் ஆளாக்கப்பட்டதோடு அவமதிக்கப்பட்டும் உள்ளனர். குறிப்பாக அவர்கள் 'தூக்கம் இல்லாமல்' செய்யப்பட்டு தங்கள் மொழியே தங்களுக்கு மறந்துபோகும்வண்ணம் கொடுமைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளனர். வண. பிதா சிங்கராயர் 2உயர் காவல் அதிகாரிகளே நேரடியாகத் தம்மைத் துன்புறுத்தியதாகக் கூறியுள்ளார். தூக்கம் இன்மையாலும், பலவிதத் துன்புறுத்தல்களாலும் அவர் மனங்குழம்பிப் போயிருந்ததை வழக்குரைஞர்கள் நேரடியாகவே கண்டனர்.

வெளியே நடக்கும் நடவடிக்கைகளைப்பற்றி மாறுபட்ட-தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளைச் சொல்வதன் மூலம் அவர்களை மேலும் குழப்புகின்ற தந்திரமும் கையாளப்பட்டது. உதாரணமாக தாம் (வண. பிதா. சிங்கராயர்) விடுதலை இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்ததான செய்தியை தாம் சேவையாற்றிய திருச்சபையே தெரிவித்ததாக காவலர் கூறியதாகச் சொன்னார், பின் தமது வழக்குரைஞர்கள் மூலம் அது உண்மையல்ல என்று தெரிந்து கொள்ளும்வரை தாம் அதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும் அடிகளார் கூறினார். இப்போது கூட இராணுவவீரர் ஒருவர் அருகே இல்லாமல் தாம் மற்றவர்களுடன் பேச அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கூறினார்.

நத்தார் விழா நாடகம்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்காக நத்தார்விழாவை இராணுவத்தினர் ஏற்பாடுசெய்துள்ளனர் என்று அரச ஊதுகுழல்ச் செய்தித்தாள்கள் தம்பட்டம் அடித்து, இராணுவமுகாமில் அவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கின்றனர் என்று உலகை ஏமாற்ற முயற்சித்தன. ஆனால் அங்கே என்ன நடந்தது. வண. பிதா. சிங்கராயரைச் சந்திக்க ஏற்பாடுசெய்த செய்தித்தாழ் ஆசிரியர் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமில்லை பிதா. செயதிலகராசா அன்று மயக்கமுற்று கீழே விழுந்துள்ளார், ஆனால் தம்மை நடுநிலைச் செய்தித்தாழ்கள் என்று கூறிக்கொள்ளும் எந்தச் செய்தித்தாழ்களிலும் இவ்விராணுவ அக்கிரமங்களை வெளியிடமுடியவில்லை. அத்தோடு நத்தார் தினத்தன்று யாழ். பிரதான வீதியில்வைத்து நத்தார்ப் பூசைகளில் கலந்துகொள்ளச் சென்ற பொதுமக்கள் இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். பெருந்தொகையான மிதிவண்டிகளும், வாகனங்களும் இராணுவ வெறியர்களினால் அடித்து நொருக்கப் பட்டுள்ளன.

வண. பிதாக்களைச் சிறைசெய்த சிலநாட்களில் சிங்கள இராணுவத்தினரின் உண்மையற்ற செய்திகளை அரச செய்தித்தாழ்கள் வெளியிட்டன. அதில் வண. பிதாக்கள் சிங்கராயரும் சின்னராசாவும் நீர்வேலிக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் என்றும், கொள்ளைப்பணத்தில் 11 இலட்சத்தை அது கொள்ளையிடப்பட்ட பணம் என்று தெரிந்தும் வங்கியில் வைப்புச்செய்தனர் என்று கூறினார்கள் எனவும், அதில் 61 ஆயிரம்உருபாவை நோட்டுக்களாகக் கைப்பற்றியதாகவும் தெரிவித்த இராணுவத்தினர், கொள்ளைப்பணத்தை சிங்கராயரே முதன்முதலில் பொறுப்பேற்றார் எனவும் தெரிவித்தனர். ஆனால் இவையாவும் வெற்றுக் குற்றச் சாட்டுகளேயென வழக்குத்தாக்கல் கோப்புகள் கூறுகின்றன.

ஆக்கிரமஅரசின் இத்தகைய அக்கிரமங்களை எதிர்த்து மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சிங்கள வெறிபிடித்த சர்வாதிகார அரசிற்கெதிராக நேரடிப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறுவழி எதுவும் இல்லை என்பதைத்தான் காட்டுகிறது.

*************************************************

" நரிகள் ஆளும் நாட்டில் நாங்கள் நிற்கிறோம்!
நாள்தோறும் மடிகின்றோம் கேட்பாரில்லை!"

∴ காசி ∴

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

* கோப்பாய் பா.உ. ஆலாலசுந்திரத்தின்மீது துப்பாக்கிச்சூடு!

கோப்பாய் பா.உ. மு.ஆலாலசுந்திரம் கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில்வைத்து 22.2.83 அன்று பிற்பகல் 3.45மணியளவில் இனந்தெரியா இளைஞர் நால்வரால் சுடப்பட்டுள்ளார். இவரைச் சுட்ட 4 வாலிபர்களும் மிதிவண்டிகளில் ஏறித்தப்பிவிட்டனர். ஆலாலை சந்திக்கச் செல்லும் பொதுமக்கள்போலச் சென்ற இவர்கள் யாழ். ப.நோ.கூ. சங்கத்தலைவராகவுள்ள ஆலாலுடன் நீண்ட நேரமாகக் கூட்டுறவுச்சங்கம் சம்பந்தமாக உரையாடினர். உரையாடல் பின்னர் வாக்குவாதமாக மாறிவிட்டது. சிலதவறுகளை வாலிபர்கள் சுட்டிக்காட்டினர். வாக்குவாதத்தின்முடிவில் இளைஞர்களுள் ஒருவர் சுழல்துப்பாக்கியைக் காற்சட்டைப்பையிலிருந்து உருவி ஆலாலின் காலில் சுட்டார். அப்போது இன்னொருவர் சுட்டவரைநோக்கி முழங்காலுக்குக்கீழ் சுடுமாறு பணித்துள்ளார். பின்னர் அவர்கள் "உங்கள் போக்குப் பிடிக்கவில்லை, நீங்கள் அதனை மாற்றிக்கொள்ளாவிட்டால் தீர்த்துக் கட்டுவோம்" என்று எச்சரித்துள்ளனர். அப்போது அவர்களைத்தடுக்கமுயன்ற பா.எ.வின் எழுதுவினைஞரையும் தள்ளிவிட்டுவிட்டு பா.உ.வின் வாகானத்தின் முன்னிரு சக்கரங்கள்மீது சுட்டுவிட்டு தப்பியதாகத் தெரிகிறது. அத்துடன் "இவர்களும் சமூகவிரோதிகளே!" என்ற தலைப்பிலான 50க்கும்மேற்பட்ட துண்டறிக்கைகளையும் எறிந்து சென்றனர். யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஆலாலுக்கு உயிருக்குக் கேடில்லை என்று மருத்துவர் தெரிவித்தனர். அதே வேளையில் இந்நிகழ்ச்சியை வழமைபோல் எதிர்க்கட்சித்தலைவர் அமிர் வன்மையாகக் கண்டித்துள்ளார். 'இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமானவர்கட்கு தக்கபாடம் கற்பிக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது' என்றும் எச்சரித்துள்ளார். இதுகுறித்து த.வி, கூ. தலைவர் சிவா இந்நிகழ்ச்சியைக் கண்டித்ததுடன் இளைஞர் சிலரது ஆழ்ந்த இனப்பற்றையும், துணிவையும், செயலாற்றலையும் தாம் என்றும் மதிப்பதாகவும், ஆனால் எம்மிடையே ஏற்படும் இத்தகைய நிகழ்வுகள் எமக்கும் பிளவுகளை வளர்த்து எம்மினத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடும் என்று கூறியுள்ளார்.

* பருத்தித்துறையில் காவல்அதிகாரி, சாரதி ஆகியோர்சுட்டுக்கொலை

பருத்தித்துறை சந்தைக்கு அருகிலுள்ள 'சிறீசு கஃபே" முன்னால் பருத்தித் துறைக் காவல்நிலையஅதிகாரி விசயவர்த்தனாவும் வண்டியோட்டி இராசபக்சாவும் வெள்ளுடைதரித்த இளைஞர்களின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலி யாகியுள்ளனர். 18.2.83இரவு 8.30 மணியளவில்இது நடந்தது. சுட்ட இளைஞர்கள் காவலரின் 'சீப்பு' வண்டியிலேயேதப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்சென்றுவிட்டனர். அவ்வண்டி ஆவரங்காலில் ஓர் ஒழுங்கையில் வைத்து க்கண்டுபிடிக்கப்பட்டது. நிகழ்ச்சி நடந்த இடத்திலேயே இறந்த இருவரும் முறையே கடவத்தை, கழுத்துறை ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள். இச்சம்பவத்தின்பின்னர் அப்பகுதியில் சில கடைகள் எரியூட்டப்பட்டுள்ளன. பொதுமக்களும் தாக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை எவரும் சிறையாகவில்லை. வடபகுதியில் பணிபுரியும் சிங்களக்காவலர்மத்தியில் இந்நிகழ்ச்சி மேலும் பெரும்பீதியை ஏற்படுத்தியுள்ளது.

* <u>நீர்வேலிவழக்கில் த.ஈ.வி.போராளிகள் அறுவரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு!</u>

நீர்வேலியில் நடந்த வங்கிப்பணக்கொள்ளை, கொலை தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்ட போராளிகளான தங்கத்துரை, குட்டிமணி, தேவன், நவரத்தினராசா, சிவபாத ஆசிரியர், நடேசுதாசன் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல்வாக்குமூலங்களின் அடிப்படையில் அவர்கள் குற்றவாளிகள் என்றும் அவர்களுக்கான தண்டனை அறிவிக்கப்படும் என்றும் கொழும்பு மேல் (அ)நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்படிப் போராளிகள் கொடூஞ்சித்திரவதைகட்கு ஆயுதப்படையினரால் உள்ளாக்கப்பட்டதும், காவல் அதிகாரிகளது பொய், குளறுபடி நிறைந்த வாக்குமூலங்கள் அம்பலப்படுத்தப்பட்டதையும்அந் நீதிமன்றம் அசட்டை செய்து இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. சிறீலங்காவின் (அ)நீதி வழங்கல் தன்மைக்கு ஒரு சான்றுகின்றது.பயங்கரவாதத் தடைச் சட்டம் விரைவில் ஒவ்வொரு தமிழனையும் குற்றவாளியாக்கப் போகிறது என்பதற்கு இத்தீர்ப்பு ஓர் எடுத்துக்காட்டாகும்.

* <u>ஐ.தே.க.வின் அமைச்சருட்பட 17 பா.உ.க்கள் பதவிவிலகல்!</u>

சிறீலங்காவின் கொடுங்கோல் ஐ.தே.க. ஆட்சியாளர்களிடையே குத்து-வெட்டுக்கள் ஆரம்பமாகியுள்ளது. சுகாதார அமைச்சர் டாக். இரஞ்சித் அத்தபத்து உட்பட 17 அரச பா.உ.க்கள் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். பதவிவிலகலுக்கான காரணமேதும் அறிவிக்கப்படவில்லை. அதேசமையம் கருத்கெடுப்பிலும், சனாதிபதித்தேர்தலிலும் ஐதே.க.வுக்கு தோல்விகிட்டிய மட்டக்களப்பு, கல்குடா தொகுதிகளின் உறுப்பினர்களாகிய இராசதுரை, தேவநாயகம் ஆகியோரையும் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்ற கோரிக்கை ஐ.தே.க.வில் வலுப்பெற்று வருகிறது. அதேவேளை ஐ.தே.க. நிதியமைச்சரான உரொனி-டீ-மெல் தமது தெவிநுவர தொகுதியின் பா.உ. பதவியைத் துறந்து புளத்சிங்கள தொகுதியின் பா.உ.ஆக நியமிக்கப்பட்டுள்ளார். தற்காலிகமாக இவரது நிதியமைச்சர் பதவியும் சனாதிபதியால் கையேற்கப்பட்டுள்ளது. இச்செயல்கள் உரொனி-டீ-மெல்லைப் பெரும் விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

* <u>பொத்துவில் முதலாவது பா.உ. சலால்தீன் குற்றவாளி!</u>

ஊழல், தவறான அதிகாரப் போக்குகள் ஆகியவைதொடர்பாகபொத்துவில் முதலாவது ஐ.தே.க. பா.உ. டாக். எம்.ஏ.எம். சலால்தீன் குற்றவாளி என விசேட சனாதிபதி ஆணைக்குழு தீர்ப்பளித்துள்ளது. சலால்தீனின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என்றும்ஆணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குழு பரிந்துரைத்துள்ளது. சிறீலங்கா மந்திரிசபை ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

* ஏம்.சி.ஆரைக் கொல்ல முயற்சி

அண்மையில் தில்லிக்குச் சென்றிருந்த எம்.சி.ஆர். தங்கியிருந்த அறைக் கதவை உடைத்தெறிந்து உட்புகுந்து ஆர்.எசு.எசு. என்னும் இந்து மத வெறியர் இயக்கத்தைச் சேர்ந்த படித்த இளைஞர் சிலர் அவரைக் கொல்ல முயன்றதாகத் தெரிகிறது. 16 இளைஞர்களின் வலுக்கட்டாய முரட்டுப் போக்கிலிருந்து தமிழக முதல்வர் தப்பினார். மதப்பேருடன் காலித்தனமாக நடந்துகொள்வதைக் கண்கூடாகத்தாம் கண்டது இதுவே முதல்முறை என்று பின்னர் அவர் கூறினார்.

* நாகர்கோவிலில் துப்பாக்கிச்சூடு; மதக்கலகத்திற்குத் தடை!

நாகர்கோவிலில் கடந்த ஆண்டு இதே நாள் மண்டைக்காட்டில்நடந்த கிறித்தவத் திருவிழாவின்போது இந்துமதவெறியியக்கமாகிய ஆர்.எசு.எசு. இயக்கத்தின் பெருஞ்சேதம் விளைவித்து, பலகொலைகளுக்கும் காரணமாயிருந்தனர் என்பது தெரிந்ததே! இப்போது இவ்வாண்டுத்திருவிழாவின்போதும் மண்டைக்காடு என்னும் ஊரில் அதேபோலக் கலகம் செய்யும்வகையில் ஊர்வலம், மாநாடு ஆகியவற்றுக்கு இந்துமதவெறியியக்கம் ஏற்பாடு செய்திருந்தது. அரசு அதற்குத் தடைவிதிக்கவே, தடையைமீறிய ஊர்வலத்தினர் மீது காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். ஒருவர் இறந்தார். இந்துமதவெறியினரின் இப்போக்கை அனைத்துக் கட்சிகளும் கண்டித்துள்ளன.

* மலையகத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு மாநாடு முழுவெற்றி!

தமிழகத்தில் நடைபெற்ற இலங்கை மலையகத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு மாநாடு சிறப்புற நடந்து முடிந்துள்ளது. இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த பேச்சாளர்களும் அறிஞர்களும் செய்தியாளர்களும் பங்குகொண்டனர். த.வி.கூ. செயலதிபர் அமிர்தலிங்கமும் கலந்துகொண்டார். மலையகத்தமிழர்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டியதை வலியுறுத்தினார். தமிழீழம் தவிர வேறெதுவும் தமிழர் சிக்கலுக்கு நிலையான தீர்வைத்தராது என்றும் கூறியுள்ளார். புதுதில்லியில் நடைபெறவிருக்கும் நடுநிலை நாடுகளின் மாநாட்டில் தலைவர் கவனத்துக்கு மலையகத்தமிழர்சிக்கலைக் கொண்டுவரவேண்டும் என்று தமிழக அவைத்தலைவர் இராசாராமின் தீர்மானம் உட்பட பல முக்கியத் தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. தம்முடைய சொந்தநலத்தை மாத்திரம் ஐ.தே.க.வின் அடிவருடியாக மாறியுள்ள தொண்டைமான் மலையகமக்களின் உரிமைக்குப் பாதுகாப்பளிக்க முயலும் இம்மாநாட்டில் பங்கேற்க மறுத்துவிட்டார்.

* தில்லியில் அரிசிகேட்டு பேச்சு நடத்தியதில் எம்.சி.ஆர்.திருப்தி

அரிசிப்பற்றாக்குறை காரணமாக தில்லியிடம் அரிசி அனுப்பும்படி கேட்டு எம்சி.ஆர். பேச்சு நடத்தினார். இதன்படி மாதந்தோறும் 85,000 டன் அரிசியும், 4,000 டன் கோதுமையும் கிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம் என்று தெரிகிறது. கடந்த சில மாதங்களாக தமிழக அரசின் இ
கோரிக்கைக்கு தில்லியரசு பிடிவாதமாக மறுத்து வந்தது; ஆனால் ஆ
திர, கருநாடகத் தேர்தல் முடிவுகளாலும், பஞ்சாப்பு, சீக்கியர்
லவரங்களாலும் அலைக்கழிக்கப்பட்டுள்ள இந்திரா இப்போது இதற்கு
ப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

* விடுதலைப்புலிகளைக்குறித்து சிங்களக் காவலர் குலைநடுக்கம்!

புலிகளைக் குறித்து அஞ்சுவதால் யாழ். காவல் நிலையப்பாதுகாப்
தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. எவரும் எளிதாகக் காவல் நிலைய
த்திற்குள் நுழையமுடியாது. புகார் செய்யச் செல்பவர்கள் கடுமையா
க விசாரிக்கப்படுகிறார்கள். காவல்நிலையத்தைச்சுற்றி இரவுபகலாக
யுதந்தாங்கிய காவலர் பாதுகாவலில் ஈடுபட்டுள்ளனர். காவல்நிலை
பத்துக்குள் நடுவே 40 ஆடி தூரத்திற்குப் பாதுகாப்புச்சுவர் அமைக்
கப்பட்டுள்ளது.

* சிங்கள-தமிழீழப் பல்கலைக்கழக மாணவர்கள் போர்க்கொடி!

பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைப் போராட்டங்களை தடை
செய்யும் நோக்குடன் அடக்குமுறை அரசு எடுக்கும் நெறியற்ற நடவ
டிக்கைகட்கு எதிராகப் போராடுவதென்று சிறீலங்கா-ஈழப் பல்கலை
க்கழகங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. ஏதாவது ஒரு பல்கலைக்க
ழகம் மூடப்பட்டாலோ அன்றி உறுப்பினர் யாராவது சிறைசெய்யப்பட்
டாலோ அதற்கெதிராகப் போராடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ள
து. களனி பல்கலைக்கழகத்தில் ஒன்றியத்தலைவர் மகிந்த புட்பகுமார
வின் தலைமையில் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவ அவைத்
தலைவர் சிறீசுகந்தராசா உட்பட அனைத்துப்பல்கலைக்கழகங்களின் பி
ரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

* தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் நாட்காட்டிகள் விநியோகம்!

தமிழீழத்திலுள்ள பாடசாலைமாணவ-மாணவியருக்குத் தமிழீழமக்கள்
விடுதலைக்கழகத்தினால் இலவசமாக நேரசூசி அட்டவணைகள் வினியோகி
க்கப்பட்டுள்ளன. அதன் ஒருபுறத்தில் தனித் தமிழ் மாதப் பெயர்கள்
கொண்ட நாட்காட்டியும் 'மக்கள் புரட்சி வெல்க!' என்ற தலைப்பு
டன் கடந்த ஆண்டு திடீர் மரணம் அடைந்த இளைஞர்களின் படங்களும்
அச்சிடப்பட்டுள்ளன.

தமிழ் மாதப் பெயர்கள் பினவருமாறு : சனவரி - சுறவம்; பிப்
ரவரி - கும்பம்; மார்ச்சு - மீனம்; ஏப்பிரல் - மேழம்; மே -
விடை; யூன் - ஆடவை; யூலை - கடகம்; ஆகத்து - மடங்கல்;
செப்டம்பர் - கன்னி; அக்டோபர் - துலை; நவம்பர் - நளி; டி
சம்பர் - சிலை.

* ஈழமாணவர் பொதுமன்றம் பாதயாத்திரை!

சிறீலங்கா அரசினர் ஒடுக்குமுறையை ஆட்சேபித்தும் பயங்கரவாதத்
தடைச்சட்டத்தின் கீழ் சிறைப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை
செய்யுமாறு கோரியும் ஈழமாணவர் பொதுமன்றம் எழுச்சிகரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தூரப் பாதயாத்திரை விரைவில் நடத்த இருக்கிறது. மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இந்த நெடுந்தூரப் பாதயாத்திரையில் மாணவ, மாணவிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலான ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முற்போக்குவாதிகள் அனைவரினதும் ஆதரவைப் பெற்று இந்தப் பாதயாத்திரை நடைபெறும் என்றும் இது ஒரு புரட்சிகரமான எழுச்சி யாத்திரையாக இருக்குமென்றும் செயலாளர் டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

* கருநாடகத்திலிருந்து தமிழகத்திற்கு அதிக நீர் தர ஒப்புதல்

மழையின்மையாலும் அணைகளில் நீர் குறைந்துள்ளதாலும் பயிர்கள் கெடுவதையும் அறுவடை குறைவதையும் தடுக்கும் வகையில், தமிழ்நாட்டுக்கு கருநாடகமாநிலத்திலிருந்து 3 கனஅடி தண்ணீர் கூடுதலாகவிட அவ்வரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை இந்திராகாங்கிரசாட்சியின்போது இதற்கு மறுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

* தென் மாநில முதல்வர் மாநாட்டுக்கு ஏற்பாடு!

இந்திய அரசிடமிருந்து அதிக அதிகாரத்தைப் பெறும்வகையில், எதிர்க்கட்சிகளும் மாநிலக்கட்சிகளுமாகியவற்றின் ஆட்சியில் உள்ள கருநாடகம், தமிழ்நாடு, ஆந்திரம் ஆகியவற்றுடன் புதுவை, கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தென்னகக் கூட்டரசு அமைவதற்கான முன்னோடியாக மார்ச்சு மாதம் இரண்டாம் கிழமை இறுதியில் இவ்வைந்துதென் மாநில முதல்வர்களும் கருநாடகத்தில் கூடி முதற்கட்ட பேச்சு நடத்துவர் என்று கருநாடக முதல்வர் இராமகிருட்டின எக்டே கூறியுள்ளார்.

* இராணுவத்தாக்குதல்

யாழ். குருநகர் இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள ஒரு சாலையில் நின்ற 3 இளைஞர்களைக் காரணமின்றி மிருகத்தனமாகத் தாக்கியதுடன் அருகில் உள்ள வீடுகளிலும் புகுந்து வெறியாட்டம் நடத்தினராம். இதுபற்றி அப்பகுதி மக்கள் காவல்துறையில் புகார் செய்துள்ளனர். அதேவேளை காரை நகரில் தன்னுடன் கூட்டு ரோந்தில் ஈடுபட்டகடற்படை வீரர் தன்னைத் தாக்கியதாகக் காவலர் ஒருவரும் புகார் செய்துள்ளார். தற்போது இராணுவத்தினரின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் பேசுகின்றனராம்.

* தமிழ்ப்பெண்களுக்கும் போர்ப்பயிற்சி!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காடுகளில் விடுதலைப்புலியினரால் போர்ப்பயிற்சி பெண்களுக்கும் அளிக்கப்படுகிறதாம். அத்துடன் இப்பயிற்சிகளில் உயர்வகுப்பு மாணவர்களும் மாணவிகளும் ஈடுபடுத்தப்படுகிறார்களாம். இதைநசுக்க காவல்துறைப்பயிற்சிக்கல்லூரியிலிருந்து வெளியேறும் காவலர்களை நேரடியாக யாழ்ப்பாணத்துக்குச் சிறீலங்காஅரசு அனுப்பிவைக்கிறது. தமிழீழப் போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்டு சிறீலங்கா அரசு குலைநடுக்கம் கொண்டுள்ளது இதனால் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நாச்சிமார் கோவிலடிக் காவலர் கொலைவழக்கு எதிரிகளிடம் குற்றப்பத்திரிக்கைகள் கையளிக்கப்பட்டது.

* எதிர்க்கட்சி முதல்வர் அமிர் தமிழ்நாடு சென்றுள்ளார்; அங்கு அவர் தமிழக முதல்வர் எம்.சி.ஆர்., எதிர்க்கட்சி முதல்வர் கருணாநிதி ஆகியோரை சந்தித்து விடுதலைப்புலி பற்றிக் கலந்துரையாடி, கையளிக்க வேண்டாமென வற்புறுத்தியுள்ளார்

* பயங்கரப் பொருளாதார நெருக்கடியினால் சிறீலங்காவில் பல பொருட்களின் விலைகள் ஏறியுள்ளன.

* சிறீலங்காவில் தமிழர் கொடுமைப்படுத்தப்படுவதால்தான் மேல் நாடுகளில் அரசியல் அடைக்கலம் கோருகிறார்களே தவிர, பொருளாதாரப் பிரச்சினையினால் அல்ல என்று மே. செருமனி ஏடான வெசுட்பலிச் ருண்ட்சோ கூறியுள்ளது.

* தமிழ் ஈழ எழுத்தாளருக்கான சாகித்திய மண்டலப் பரிசை 4ஆண்டுகளுக்கொருமுறை தருவது என்ற சிறீலங்கா அரசின் திட்டத்தைக் கண்டிக்கும் வகையில் சாகித்திய மண்டலப்பரிசுகளைப் புறக்கணிப்பது என்று தமிழ் எழுத்தாளர்கள் அறிவித்துள்ளனர்.

* காலி நகரில் நடந்த வன்செயலை ஆராய்ந்துவரும் ஆணைக்குழுவின் விசாரணையின்போது அரசின் வண்டவாளங்கள் வெளிவரும் எனப்பயந்து அரசு ஆணைக்குழுவை இடை நிறுத்தியுள்ளது.

* தமிழ்நாட்டைச் சேர்ந்த மரியதாசு, இராசு, ஆகிய இருபயணிகள் சிங்களக் காவலரால் தாக்கப்பட்டுள்ளனர். இதற்காக நட்டஈடாக தலைக்கு 5000 உருபா வழங்கும்படி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

* திருவாட்டி நிருமலா நித்தியானந்தனை விடுதலை செய்யும்படிகோரி இலண்டன் வாழ் பெண்கள் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

* தமிழீழக் கடல்பிராந்தியத்தில் சிங்கள மீனவர்கள் ஊடுருவி, தமிழ் மீனவர்களைத் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது.

* கனடாவில் சிறைசெய்யப்பட்ட தமிழ் இளைஞரைத் தம்மிடம் ஒப்படைக்கக் கேட்டு சிங்கள அரசு எடுத்த முயற்சி, கனடா தமிழீழ விடுதலை இயக்கத்தின் முயற்சியினால் முறியடிக்கப்பட்டது.

* ஆனைக்கோட்டைக் காவல்நிலையத் தாக்குதல் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

* இலங்கை, தென்னிந்தியப் பகுதிகளில் விளையும் தேயிலைகளில் இருதய நோயினைத் தடுக்கும் தாதுப் பொருட்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

* புலிகளை நாடுகடத்துமாறு தொண்டைமான் கோரிக்கை.

* சிறைப்பட்டுள்ள பாதிரிமாரை விடுதலை செய்யும்படி கோரி செருமனி திருச்சபை அறிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

# வேள்வியில் பலத்தீனம்

.:. கிறித்தி .:.

பிரித்தானிய அரசு பலத்தீனத்தைவிட்டு நீங்கும் நாள் 14 மே, 1948 – நெருங்க நெருங்க – கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு கட்டிடத்தையும், வீதியையும், கிராமத்தையும், நகரத்தையும் யார் முதலில் கைப்பற்றுவது என்பது முக்கிய அரசதந்திரமாக விளங்கியது. பிரித்தானிய அரசு நீங்கும் வேளை யாருடைய கை ஓங்கியுள்ளதோ – அங்குதான் வெற்றி–தோல்வியின் நிலையும் அடங்கியுள்ளது, என்பது அனைவருக்கும் தெளிவாயிற்று. எனவே, சண்டைகளும் கொலைகளும் மலிவுறு நிகழ்ச்சியாயிற்று.

அரபுக்களால் முற்றுகையிடப்பட்ட ஒரு கிராமக் குடியிருப்பை மீட்கும்பணியில் ஈடுபட்டு எருசலமுக்குத் திரும்பும் வழியில் 'ககானா'வின் படைகள் அரபுக்களால் தாக்கப்பட்டு படுதோல்வியடைந்தன. அச்சண்டையில் ஓர் அரபு இளைஞன் தன் உடலோடு கன்னெய் (பெட்ரோல்) குண்டை இணைத்து கவசமோட்டாருக்குள் குதித்து, கவசமோட்டாரை யழித்துத் தானும் மாண்டான். தோல்வியுற்று, ஆயுதங்களையும் வாகனங்களையும் பறிகொடுத்து, பிரித்தானிய இராணுவத்தால் காப்பாற்றப்பட்ட 'ககானா'வின் படைகள் எருசலமுக்குள் நுழைந்தன. இறந்தவர்களைம், காயமுற்றோரையும் தாங்கிக்கொண்டுவந்த வாகனம் எருசலம் வீதியில் ஊர்ந்தது. எருசலமின் யூதர்கள் கிலிபிடித்த முகங்களுடன் கண்கள் கலங்க அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். திடீரென 'ககானா'வின் காயமடைந்த வீரர்கள் பாடத்தொடங்கினர். வீதியில் நின்ற மக்களும்அவர்களுடன் இணைந்து பாடத்தொடங்கினர். அப்பாட்டின் ஒலி எங்கும் பரவி எருசலம் வீதிகளில் எதிரொலித்தது. அவர்கள் பாடியது அவர்களின் தேசியப் பாடலான 'நம்பிக்கை' என்பதாகும்.

அரபுக்க்ள் தம்மால் எவ்வளவு திறமையாகச் செயற்படமுடியும் என்பதை மெய்ப்பிப்பதுபோல் ஒரு காரியம் செய்தனர். கடுமையாகக் காவல்செய்யப்பட்டுவந்த யூத முகாம்களின் 'சியோனிச' இயக்கத்தின் தலைமையகத்தை குண்டுவைத்துத் தகர்த்தனர். அரபு இளைஞன் தாவூது பலத்தீன ஐ.நா.சபை.ப் பிரதிநிதியின் வண்டியோட்டி. யூத முகாமையகத்திற்கு அடிக்கடி அலுவலர்களை அழைத்துப்போகவருவான். அதேவேளை அரபுத்தலைமையின் திட்டப்படி யூதர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படியாக யூதப்போர்வீரர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்துவந்தான். குறிப்பிட்டநாள் உள்முற்றத்தில் தன் வண்டியை நுழையவிட்டால்தான் ஆயுதங்களை் இரகசியமாக அளிப்பதற்கு இயலும் என்று கூறினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரவெடிகுண்டு பொருத்தப்பட்ட வண்டியுடன் உள்நுழைந்த தாவூது தர ப்பட்ட ஆயுதத்திற்கான பணத்தை எடுப்பதற்காக யூதவீரன் ஒருவன் உள்ளே போக - வெளியில் உள்ள கடைக்கு வெண்சுருட்டு வாங்கச் செல்வோன்போல் வெளியேறி மறைந்தான். திரும்பிவந்த யூதவீரன் சந்தேகம் எழ - வண்டியைச்சிறிதுதொலைவு எடுத்துச்செல்வதற்குள் குண்டு வெடித்துத் தூள்தூளாகச் சிதறுண்டான். அவனது செயலால் யூதமுகாமையின் இராணுவப்பகுதி காப்பாற்றப்பட்டது. 'சிவில்'ப குதி முற்றும் அழிந்தது. சிற்றுந்து அவ்விடத்திலேயே நின்றிருக்குமானல் 'ககாணு'வின் முக்கியப்படைத்தலைவர் அனைவரும் இறந்திருப்பர்.

'சிவில்'பகுதியில் கடமை புரிந்த ஒரு முக்கிய அதிகாரி மறுநா ள் ஐ.நா. சபைச் செயலாளர் ஒருவரைச் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது. அவ்வதிகாரி சிறுநீர் கழிக்க உள்ளே நுழைந்ததால் எவ்வி தக் காயமும் இன்றி தப்ப -அவர் மனைவி கடுமையாகத் தாக்கப்ப ட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். மறுநாள் திட்டமிட்ட படி ஐ.நா.சபைச் செயலாளருடன் சந்திப்பு நிகழ்ந்தது. மனைவி யைப்பற்றிய நினைவே யில்லாமல் நாட்டைப்பற்றி வாதாடிக்கொண்டி ருக்கின்ற அவ்வதிகாரியைப் பார்த்து ஐ.நா. செயலாளர் கூறுகிறார் "உனது மக்கள் வெற்றி பெறுவதை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடி யாது." அப்போது அந்த யூத அதிகாரி நினைத்தார் "நாங்கள் உறுதியாக இருப்பது உண்மைதான். அப்போதுதான் நாம் ஒரு நா டாக அமைவோம்."

அரபுக்களின் பொருட்டு பலத்தீனத்தில் சண்டை புரிவதற்காக - சிரியா நாட்டால் செக்கோசுலோவாகியாவில் வாங்கப்பட்ட ஆயு தங்கள் எசு.எசு.லினோ என்ற கப்பலில் வந்து கொண்டிருந்தன.'க காணு' தனது கையாளான முன்னைய பிரித்தானிய விமானப்படையைச் சேர்ந்த ஒருவனை - தனியார் விமானம் ஒன்றில் குண்டுகளை ஏற்றி- கடலில் வைத்து அக்கப்பலை அழிக்க ஆணையிட்டது. கப்பலைக் கடலி ல் தேடிடும் முயற்சியில் அக்கையாள் தோல்வியுறவே - அப்போது அடித்த புயலில் அக்கப்பல் இத்தாலித் துறைமுகம் ஒன்றில் தரைதட்டி நின்றது.இச்செய்தி இத்தாலியச் செய்தித்தாள்களில் வெளியாயிற்று. 'ககாணு'வின் இத்தாலியக் கையாட்கள் இத்தாலிய அரசைக்கவிழ்ப்பத ற்காக கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள் என்ற பொய் வதந்தியைப்பர ப்ப - இத்தாலி அரசு அக்க்கப்பலைத்தடுத்து நிறுத்தி விசாரணைக்குட் படுத்தியது. அதேவேளை 'ககாணு'வின் அழிப்புப்பிரிவின் கைகளில் அக்கப்பலை அழிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அழிப்புக்குழு அமெரிக்க வாகனமாக மாற்றப்பட்ட வண்டியில் து றைமுகத்தை நோக்கி விரைந்தனர். குண்டு எடுத்துச்செல்லப்பட்டபெ ட்டியின்மேல் டீ.டீ.டி. மருந்து என்று எழுதப்பட்டிருந்தது. காவல் அதிகமிருந்ததால் தரையால் கப்பலை அணுகாது கரையோரக்கிரா மத்தை அடைந்து அங்கிருந்து 2 நீர்மூழ்கிகளும் ஒரு வெடிகுண்டுவிற்பன் னனும் - ஆட்படகொன்றில் இரவில் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வளரும்)

# சுதந்திர பாலத்தீன இராச்சியம் விரைவில் அமையப் போவது உறுதி!



## தாயின் சிறை உடைப்போம் !

******குமாரசக்தி********

புழுதியில் கிடக்குதோர் அம்மன்சிலை !
புலையர்கள் அதன்மேல் உமிழுகிறார் !
பழுதிலாக் காய்ச்சிய பொன்னின்சிலை !
பாழ்த்தது வென்றே பகைநினைவு !
வழுவிலா அம்மை வாடுகிறாள் அவள்
வருந்திடும் நீயோ தூங்குகிறாய் !
இழுக்கது துடைக்க இரைந்து எழுமின் !
இன்னல்கள் உடைக்க எழுந்திருமின் ! 1

பழுத்த மாமரச் சோலை அவள் !
பாரிலும் மூத்த கன்னி அவள் !
அழுக்குகள் இன்று வசை எறிந்து
அரக்கிட அவளின் அழ கெல்லாம்
புழுக்களில் கீழ்போல் தூங்குகிறாய் !
புழுதியும் தமிழை மூடுவதோ?
உழுகணைக் கொண்டு பகை துடைத்த
உயர்குலம் பெற்றாள், நோகுவதோ? 2

மூத்தமன்னர் முடி மடைமை
முடக்கத் தமிழ்த்தாய் சிறைபுகுந்தாள் !
காத்த செல்வம், கலை, உயர்வு
கள்வர் கொள்ள நிலம் விழுந்தாள் !
சேர்ற்றல் அடித்த இப்புலனைத்
துதிக்க இன்னும் வாழ்வதற்கு
காத்த தெய்வம் பாழ் வயிற்றில்
கனக்கச் சுமந்த விதியதற்கோ? 3

சண்டை செய்து நமக்குள்ளே
சாதல் இன்னும் போகாதோ?
மண்டை உடைத்து உடன்பிறப்பை
மறுக்கும் சாதி தீயாதோ?
அண்டை நாட்டார் வாழ நாம்
அயலார் வேட்டைக் காளானல்
தொண்டைக் குள்ளே புயல் ஊழி
சுமக்கும் இனமாய் அழிந்திடுவோம் ! 4

இன்றேகொள்வோம் தலம்என்று, இழந்தமண்ணைக் காப்பதற்கு !
வென்றே வாழ்வோம் தாய்மண்ணில், விளக்கம்இதற்குவேறில்லை !
நன்றே இதுதான், நலமும் இதுதான், நாண இதிலே ஏதுமில்லை !
கன்றே காக்கத் தாய்ப்பசுவை ! கனிகள் சாவில் பிசகாமோ !

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

" தமிழர்களுக்கும் - சிங்களவர்களுக்கும் இடையே பெரும் மோதல் வரும் " - தார்மீகம் பேசுகிறது.



∴ "புலிப்படையின் வன்முறைப்போராட்டத்தை, சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக நடத்தும் போராட்டத்தில் இருந்து பிரித்து விடவேண்டும்

∴ "தமிழ் ஈழக்காரர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்வோரால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பிரச்சினையை மிகவும் கவனமாக அணுகவேண்டும். இல்லையேல் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே பெரும் மோதல் ஏற்படும்..."

∴ வடக்கில் பயங்கரவாதத்தை (?) முறியடிக்க அரசு உறுதியான தீர்க்கமான முடிவுகளை எடுக்கும். பயங்கரவாதத்தை முறியடிக்கவே வடக்கில் இராணுவம் முகாமிட்டிருக்கிறது.

∴ வடபகுதி வன்செயல்களை முற்றாக நிறுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. இவற்றை அடியோடு ஒடுக்க அரசாங்கத்தினால் முடியும். இளைஞர்களும் யுவதிகளும் துப்பாக்கி ஏந்திப் பிரச்சினைகளுக்கு என்றும் தீர்வு காணமுடியாது.

***********************************

## விடுதலைப் போராளிகளின் வீரமுழக்கம்

∴ தங்கத்துரை :- "நாம் இனவெறியர்களோ கள்வர்களோ அல்லர் சுதந்திர வேட்கைகொண்ட போராளிகளே. எமது மீதிவாழ்நாளை சிறையில் கழிக்கவோ, அல்லது மரணத்தைத் தழுவவோ நாம்தயங்கப் போவதில்லை."

∴ குட்டிமணி :- "தமிழீழ விடுதலை இயக்கத்தின் விடுதலைச் சுலோகங்களை சுமந்துசெல்லும் போராளிகளே நாங்கள் எமது மக்களால் நேசிக்கப்படும் இனவிடுதலை வீரர்கள். உயர் இலட்சியத்திற்காக போராடுபவர்கள் நாங்கள். நாம் அரசியலை ஒரு புனிதக் கடமையாக ஏற்றுள்ளோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகவிரோதிகளை வேட்டையாடுவதில் தமிழீழ விடுதலை இராணுவம் தீவிரம்!

கோண்டாவில் மேற்கு நாதன் என்ற செல்வநாதன் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் பட்டதற்கு தாமே பொறுப்பென்று தமிழீழ விடுதலை இராணுவம் அறிவித்துள்ளது. இவ் அமைப்பு வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் "தமிழும் தமிழீழமும் எங்கள் உயிரிற்கு நேர்" என்றும் இவற்றை நேசிக்காதவர்களை தமிழீழத்தில் வாழவிடப்போவதில்லை என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சுதந்திர தமிழீழம் மலரும்வரை தங்கள் இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் ஏற்கனவே தங்கள் நடவடிக்கைகட்கு உட்பட்டு உயிர்தப்பியவர்கள் தொடர்ந்தும்-தங்களியக்கத்திற்கு விசுவாசமாக நடக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை செய்துள்ளனர். மேலும் துண்டுப்பிரசுரத்தில்:-

∴ நாம் ஒவ்வொன்றையும் மிகநுணுக்கமாக அவதானித்தே தண்டிக்கிறோம்.

∴ கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த நவரெத்தினம் பல தாலிப்பறிப்பு, வீடுபுகுந்து கொள்ளையடித்த சம்பவங்களை முன்னின்று நடத்தியவன் மக்கள் தந்த தகவல்களின் மீதுதான் அவன்மீது நடவடிக்கை எடுத்தோம்.

∴ விடுதலை இராணுவத்தினராகிய நாம் மக்களுக்கே எம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம்.

∴ நாம் ஒருபோதும் மக்களின் சொத்துக்களைத் தொடமாட்டோம்

∴ தனிப்பட்ட கொள்ளையர்கள் மீது நாம் இராணுவ நடவடிக்கை எடுக்கும்போது மக்கள் எமக்குப் பூரணஒத்துழைப்புத் தரவேண்டும்

∴ தமிழீழம் தமிழனுக்கே.

∴ அண்ணன் குட்டிமணி காட்டிய வழியில் சமதர்ம தமிழீழத்தை அமைப்போம்.

அன்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர்கள், பருத்தித்துறை நகரசபை ஐ.தே.க. உறுப்பினர் சந்திரசேகரம் ஆகியோர் மீதான துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றிற்கும் தாமே பொறுப்பு என்றும் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இராணுவத்தினர் இத்தகைய நடவடிக்கைகட்குப்பின் தமிழீழத்தில் களவு, வழிப்பறி போன்றவை பெருமளவு குறைந்துவிட்டதாக என செய்திகள் கூறுகின்றன.

---

மன்னிக்க!

பேரவையின் நாட்காட்டியில் அச்சகபதிப்புப்பிழை காரணமாக தீவுப்பகுதிகளும், தலைமன்னாரும் தவறிவிட்டது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MOURASSOU

MURASU 1 — MARS -- 1983 — OLY 5


AMIR INTERVIENT CONTRE TOUTE DEMANDE D'EXTRADITION.

Le Secrétaire général et leader de l'opposition du T.U.L.F. M.A.Amirthalingam, va insister auprêsdu premier Ministre Tamil nadu, M.M.G.Rramachandran, pour qu'il obtienne du Gouvernement Indien qu'il n'extrade pas de Sri Lanka Uma Maheswaran, Piraba haran et d'autres jeunes gens impliqués dans la fusillade du B azar Pondy. Pendant son séjour, M. Amirthalingam a participé à une conférence organisée par l'Association des Amis de l'Ealam Tamil et il a rrencontré M.M.G.Ramachandran et le leader T.M.K Kalaignar Karunanithy.

Le G.U.E.S. PROJETTE UNE MARCHE DE 3 JOURS CONTRE LA LOI SUR LE TERRORISME:

Une "Pathayathirai"(marche passive) de trois jours consécutifs faisant appel aux ouvriers, aux agriculteurs, aux jeunes, aux femmes et aux étudiants, doit avoir lieu à l'initiative des ét udiants Ealam(G.U.E.S) pour éveiller la conscience populaire contre la loi sur la Prévention du Terrorisme. Le secrétaire du GUES, Mr.M.Davidson, lançant un appel dans ce sens, a décla ré que cette marche fera partie de la compagne visant à libérer la population Ealam Tamil de la loi tyrannique du gouvernement capitaliste Srilankais, et demandant la libération de tous les Tamils qui sont détenus par les forces militaires sans avoir été traduits en Justice.

Tout en exhortant toutes les forces progressistes à souten ir cette compagne, le GUES a également fait appel à la populat ion pour qu'elle accueille favorablement la collecte de fonds destinée à cette marche historique.

UN SWAMI HINDOU INTEROGE AU SUJET DE SES LIENS AVEC "TIGER"!

Swami Premanandhaji, de l'Ashram Poopalakrishna de matale,à été récemment interrogé au sujèt de ses fréquentes visites à Jaffna et on lui a demandé s'il avait des liens quelconques avec les Tigre de la libération de l'Ealam Tamil on avec le Front de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

libéraion des Tamils Unis. Deux personnes, probablement des des dirigeants du CID, se sont rendues dans son Ashram de matale et lui ont dit que de nombreuses pétitions émanant du Sud du pays étaient dirigées contre lui et qu'ils désiraient enregistrer sa déclaration. Swami a totalement nié ces accusations. Il part ce mois-ci pour Londres pour une mission de prédications.

## L'ARMEE DE LIBERATION DE L'EALAM TAMIL EN MARCHE ·

L'Armée de libération de l'Ealam Tamil a entrepris de rechercher les personnes qui ont dérobé des biens aux Tamils sous le convert d'une organisation de jeunes. Elle a distribué sur tout le terri toire de l'Ealam Tamil, des tracts dans lesquels il est nié que des mouvements de libération de l'Ealam Tamil ont jamais volé des Tamils. Et elle assume la responsabilité des deux récentes fusillades. Elle avertit également les personnes qui s'en pren nent à la population Tamil et qui les volent qu'elles seront pun-ies par l'Armée de l'Ealam Tamil. Aprés cet avertissement, on a constaté une nette diminution des vols dans l'Ealam Tamil.

## LE GOUVERNEMENT DE SRI LANKA ACCUSE LE CLERGE SOUS LE CONVENT DE LA LOI SUR LA PREVENTION DU TERRORISME.

Le Gouvernement de Sri Lanka détient en prison des membres du clergé, un médecin un professeur et son épouse professeur égale ment depuis Novembre 1982. Deux chefs d'accusation sont maintin ant prononcés contre eux aux termes de la loi sur la prévention du Terrorisme: Le premier se rapporte au pillage de la Banque de Neerveli dont sont accuses les Réverends pères Singarayar et Sinnarasa; le second chef d'accusation concerne l'attaque du post de police de Chavachcheri, dont sont accusés les R.P.Singarayar et Jeyathilagarajah, le Dr Jeyakularaja, M. Nithiyanandan et Madame Nirmala Nithiyanandan.

## LE MINISTRE DES FINANCES: UN " DEGONFLEMENT " TEMPORAIRE.

Le Ministre des Finances Ronnie de Mel, a démissionné de son corps électoral de Devinuwara et il vient d'être élu M.P.au siège Cinghalais de Bulath rendu vacent par le démission du M.P.Monsieur O.S.Perera. Dewinuware est l'un des corps électoraux où les voies se sont prononcées contre le Gouvernement au dernier Référendum. et à présent, M.de Mel est ministre sans port-feuille; il est temp porairement à la disposition de président.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DEMISSIONS EN CHAINE AU SEIN DU GOUVERNEMENT U.N.P. AU POUVOIR.

Le Gouvernement U.N.P. au pouvoir de Sri Lanka connence à s'ef fondrer. 17 membres du Parlement comprenant le Ministre de la Santé ont démissionné. On s'attend prochainement à des élections partielles pour ces sièges à pourvoir. En même temps, le Prési dent de la commission a accusé le Dr. Jalaldin, M.P.pour Pottuvil (U.N.P.) d'usupation de pouvoirs et de corruption.

KUTTIMANI L'A ECHAPPE BELLE !

Mr. Selvarajah Yogachandran (Kuttimani), second accusé dans l'affaire du pillage de la Banque de Neerweli, a échappé de feu à la mont le lundi 7 Février, quand les doigts nerveux d'un caporal de l'armée ont actionné une mitraillette à l'intérieur de la voiture cellulaire où se trouvaient Kuttimaini le caporal et deux geôliers. La balle a percé le toit de la voiture manqu ant de peu les deux geôliers également. Kuttimani était alors escorté vers le Tribunal de Bullers Road.

CINQ HOMMES ARRETES DANS L'AFFAIRE DE L'ASSASSINAT DE L'ORGA-NISATEUR U.N.P.

Trois Tamils et deux cinghalais ont été arrêtés à propos de l'assassinat, à Vavuniya, de M.K.Palandran, Organisateur U.A.P.

PROTESTATION EN ALLEMAGNE.

Des groupes d'exiles Tamils en Allemagne ont organisé une manifestation à Francfort récemment pour protester contre la loi sur la prévention du Terrorisme à Sri Lanka. Ils ont réclamé la liberté pour de jeunes activiter Tamils accusés de TERRORISME et soumis à la torture. Ils ont également demandé l'asile poli tique pour les Tamils et la cessation des déprtations

10 JEUNES SONT LIBERES PAR LE JUGE.

Dix jeunes gens de Valuettiturai qui avaient été arrêtè Par la police sur la voie publique sous l'inculpation de "TERRORISTES" et incarcérés ont été libérés par le Juge de point redro M.V.P. Sunterlingam, la défense ayant souligné qu'il n'existait aucune preuve de leur participation au mouvement terroriste.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNE FEMME TAMIL ECRIVAIN A LONDRES INTERROGEE PAR SCOTLAND YARD

Une romancière Tamil résidant à Londres, Madame Rajeswari Bala subramaniam, a été interrogée récemment par des hommes de Scotland Yard à son domicile. La Picket cause de cet interogat oire était le Rajesh qu'elle avait aidé à nagriser récemment à l'extérieur du "Ceylon tea contre" à Piccadilly Circus le qui était tout-à-fait pacifique, était une protestaion contre le détention de Madame Nirmala Nithyananthan, écrivain et dramaturge Tamil bien connue, qui est détenue sans jugement au Camp militaire de Gourunagar à Sri Lanka depuis le 18 Novembre 1982. Il n'existe aucun gardien féminin dans ce camp et les parents et amis de Nirmala n'ont pas été autorisés à lui rendı visite.

# ARMÉE ENTRÉE DANS LA ZONE TAMOUL



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

∴ பிரான்சு

## மாநகரசபைத் தேர்தல்கள் ... அரசுக்கு ஒரு சோதனை!

இம்மாதம் 6ஆம், 13ஆம் திகதிகளில் பிரான்சின் 219 மாநகரங்களில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஆளும் சோசலிச அரசுக்குப் பெரும் சோதனையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது 219 நகரங்களில் 154 நகரங்களின் நிர்வாகம் சோசலிச-கம்யூனிச கூட்டணியிடம் உள்ளது. இவற்றில் 10முதல் 50வரையிலான நிர்வாகங்களை ஆளும் கூட்டணி இழக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தேர்தலில் பிரதமமந்திரி பியர் முருவா உட்பட 40 அமைச்சர்கள், உதவி அமைச்சர்கள் போட்டியிடுகின்றார்கள். ஆளுங்கூட்டணிக்கு எதிராக வலதுசாரிக்கட்சியினர் கடும் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

## வேலைநிறுத்தக்காரர்கள்மீது கடும்நடவடிக்கை

தொடர்ச்சியாக வேலைநிறுத்தங்கள் நடைபெற்றுவரும் மோட்டார்வாகன உற்பத்தி நிறுவனங்களான 'ரேனோல்ட்டு', 'சித்திரோயன்' ஆகியவற்றின் நிர்வாகங்கள் தொடர்ந்து வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுவரும் வடஆப்பிரிக்க, அல்சீரிய, மொரோக்கோ குடியேற்றத் தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்க முடிவு செய்துள்ளது. நிர்வாகங்களின் இம்முடிவைக் கண்டித்து தொழிற்சங்கங்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

## பிரான்சு வெளிநாட்டமைச்சரின் சோவியத்து பயணம்

பிரான்சின் வெளிநாட்டமைச்சர் வெளிநாட்டமைச்சர் குளோதுசெயிசோன் தம் 5நாள் உருசியப் பயணத்தை முடித்துத் திரும்பியுள்ளார். பிரான்சுக்கும் உருசியாவுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்படுத்துவதற்காக இவர் சென்றிருந்தார். அந்நாட்டுத்தலைவர் ஆந்திரப்போவுடன் பேச்சு நிகழ்த்தியுள்ளார். ஆப்கானித்தானம், போலந்து ஆகிய நாடுகளில் உருசிய நிலை தொடர்பாகப் பிரான்சின் அதிருப்தியையும் இவர் தெரிவித்துள்ளார்.

## பொலிவிய சனாதிபதிக்கு மித்திரான் நன்றி

நாசி கொலைகாரன் பார்பியை பிரான்சிடம் கையளித்ததற்காக பிரஞ்சு சனாதிபதி மித்திரன் பொலிவியத்தலைவருக்கு நன்றி தெரிவித்துள்ளார். முன்னர் பொலிவியாவில் ஆட்சிபீடத்திலிருந்த இராணுவஅரசு பார்பியைபிரான்சிடம் கையளிக்க மறுத்ததுதெரிந்ததே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா

### சி.ஐ.ஏ.யின் நாசவேலைகள் அம்பலம்!

உலகநாடுகள் பலவற்றில் நிகழும் அரசியற் கொலைகட்கும், சதி முயற்சிகட்கும் அமெரிக்க அரசின் உளவுப்படையான சி.ஐ.ஏ.காரணமாக இருந்துவருவது தெரிந்ததே! தற்போது இதனுடைய இன்னுமொரு நாசவேலை அம்பலத்துக்கு வந்துள்ளது. பார்பி உட்பட 22க்கும் மேற்பட்ட நாசிக் கொலைகாரர்கட்கு அமெரிக்க அரசு சி.ஐ.ஏ. மூலம் மாதம் 1700 தாலர்களும் இதர வசதிகளும் செய்து கொடுத்து பாதுகாப்பளித்து வந்திருக்கிறது. சோவியத்து யூனியன் பற்றிய இரகசியங்களை அறிவதற்காகவே இவர்களைப்பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

### சல்வதோர் கொரில்லாக்களுடன் பேச அமெரி. காங். வற்புறுத்தல்

முதலாளித்துவத்திற்கு எதிரான விடுதலைப்போராட்டத்தில் வெற்றிகளைக் குவித்து வரும் எல் சல்வதோரின் இடதுசாரிக் கொரில்லாக்களுடன் பேச்சு நடத்தவேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்கக் காங்கிரசில் வலுவடைந்து வருகிறது. அத்தோடு 1983ஆம் ஆண்டுக்கு 26.3 மில்லியன் தாலர்களையும், 1984ஆம் ஆண்டுக்கு 86.3 மில்லியன் தாலர்களையும் சல்வதோர் அரசுக்கு இராணுவ உதவியாக வழங்கவேண்டும் என்ற இரீகன் நிருவாகத்தின் தீர்மானத்திற்கும் பலத்த எதிர்ப்பு கிட்டியுள்ளது. பெரும் பொருளாதாரப்பிரச்சினையை எதிர்நோக்கும் அமெரிக்கா மனித உரிமைகளை அலட்சியப்படுத்தி அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் சல்வதோர் அரசுக்கு உதவியளிப்பதை அமெரிக்க மக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

## உருசியா

### உருசியாவின் பொருளாதார முறை மறுபரிசீலனை செய்யப்படுகிறது

உருசியநாட்டின் புதியதலைவர் ஆந்திரபோவ், தமது நாட்டின்பொருளாதார முறைகளை மறுபரிசீலனை செய்து அவற்றில் புதியமுறைகளைப் புகுத்தி அமுல் நடத்துமாறு உயர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். இதற்கு முன்னோடியாகத் தம்பிடியில் இருக்கும் 'அங்கேரி'யின் பொருளாதாரநடைமுறைகளைப் பரிசீலிக்க ஒரு குழுவை அனுப்பியுள்ளார்.

## மேற்கு செருமனி

### ஆளும்கட்சிக்கு ஆதரவு அதிகரிக்கிறது

இம்மாதம் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் குறித்து நடைபெற்றஅபிப்பிராய வாக்கெடுப்புக்கள் தற்போதைய ஆளும் கட்சியான கிறித்துவ சனநாயகக்கட்சிக்கு எதிர்பாராதவிதமாக ஆதரவு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. கிறித்துவ சனநாயகக் கட்சிக்கு 49% மானஆதரவும் சமூக சனநாயகக் கட்சிக்கு 42%மான ஆதரவும் கிட்டியுள்ள போதும் தேர்தல் குறித்துத் திட்டமான முடிவுகளைக் கூறமுடியாமல் உள்ளது. செருமனியில் 2.5 மில்லியன் வேலையில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களும் நாட்டின் பொருளாதாரப் பாதிப்பால் பாதிக்கப் பட்டவர்களும் கிறீன் கட்சிக்குப் பெரும் ஆதரவை வழங்கலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. இக்கட்சி நியூக்கிளியர் ஆயுதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மக்களை ஓரணியில் திரட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கட்சியாகும்.

ஈரான்

போர் தொடர்கிறது

கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக நடைபெற்றுவரும் ஈரான்-ஈராக் நாடுகட்கிடையிலான போர் சமீபகாலத்தில் மிகஉக்கிரமடைந்துள்ளது. ஈரானில் மேற்கொள்ளப்பட்ட பெரும் தாக்குதல் ஒன்றில்இருதரப்பிலும் பெருமளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆயிரக்கணக்-கான உடல்கள் போர்முனையில் சிதறிக்கிடந்ததாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளையில் ஈராக் சனாதிபதி சதாம்குசேயின் போரை நிறுத்துமாறு ஈரான் மக்களிடமும் ஐ. நா. சபையிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இசரயேல்

இசரயேலின் புதிய பாதுகாப்பு அமைச்சர் அரென்

இசரயேலின் புதிய பாதுகாப்பு அமைச்சராக இசரயேலின் அமெரிக்கத் தூதுவரான மோசே அரென் நியமிக்கப் பட்டுள்ளார். பெய்ருத் படுகொலைகளை விசாரித்த விசாரணைக்குழுவின் பெயரில் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து விலகிய சரோன் மந்திரிசபையில் இலாகா எதுவுமற்ற அமைச்சராக தற்போது இருக்கிறார். அதேவேளையில் இசரயேல்-இலெபனன் சமாதானப் பேச்சுவார்த்தைகட்கு பொறுப்பாளராக இவரை பெகின் நியமித்துள்ளார்.

பாலத்தீனம்

பாலத்தீனிய தேசியசபை கூடியது

சமீபத்தில் அல்சீரியாவில் நடைபெற்ற பாலத்தீனிய தேசிய சபைக் கூட்டம் பா.வி.இ. தலைவர் அரபாட்டின் கொள்கைகளுக்கு வலிவூட்டுவதாக அமைந்துள்ளது. அரபாட்டின் கொள்கைகளும், சமீபத்திய - யோர்தான் மன்னருடனான பேச்சுவார்த்தைகளும் பா.வி.இ. தின்தீவிரவாதப் பிரிவுகளால் வன்மையாகக் கண்டித்தபோதும் சபை அரபாட்டின் கொள்கைகட்கு சாதகமான முடிவுகளை எடுத்துள்ளது. எகிப்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவது தொடர்பாக ஒரு குழுவை நியமித்த சபை, யோர்தான் மன்னர் உசேனை, பாலத்தீன சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற அனுமதிக்கவும் தீர்மானித்துள்ளது. சுதந்திர பாலத்தீன இராச்சியம் ஒன்றை அமைப்பதற்கான இராணுவ அடிப்படையிலான ஆயுதப்போராட்டத்தை சபை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்பாவே

முகாபேயின் இராணுவ வெறியாட்டம்

சிம்பாவே பிரதமர் முகாபேயின் அரச இராணுவம் நாட்டின் கிராமப்புறங்களில் கொலை, கொள்ளை, கற்பளிப்பு போன்ற வெறியாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. கொரில்லாக்கள் என்ற-யோர்வையில் 500 க்கு மேற்பட்ட அப்பாவிப் பெண்களையும் குழந்தைகளையும் அரசபடை கொன்று குவித்துள்ளது. அத்தோடு சிம்பாவேயின் எதிர்க்கட்சித் தலைவரான நொாகோர்வும் வெளிநாட்டு மாநாடு ஒன்றிற்குச் செல்ல முற்பட்டபோது விமானநிலையத்தில் வைத்துத் தடுக்கப்பட்டு 8 மணிநேரம் காவலரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். முகாபேயும் நொாகோமாவும் வெள்ளையர்களிடமிருந்து சிம்பாவேக்கு சுதந்திரம் பெறுவதற்காக கொரில்லாப் போராட்டங்களை நடத்தியவர்களாவர் 3 வருடங்களுக்கு முன்புதான் சிம்பாவே வெள்ளையர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்கது.

நிக்கரகுவா

புரட்சி அரசைக் கவிட்க அமெரிக்கா முயற்சி

நிக்கரகுவாவின் சாண்டினித்திய புரட்சியரசை கவிட்கும் முயற்சிகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. சமீபத்தில் நிக்கரகுவாவின் எல்லையில் ஒண்டுராசின் இராணுவத்தோடு அமெரிக்கத் துருப்புகளும் இணைந்து பெருமளவிலான யுத்தப்பயிற்சி ஒன்றை நிகழ்த்தியுள்ளன. இது நிக்கரகுவா-ஒண்டுராசு இரு நாடுகட்கும் இடையில் சுமூகமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளையில் நிக்கரகுவாவின் முன்னாள் சர்வாதிகாரி சொமுசாவின் கூலிப்படைகளுக்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கிவருகின்றனர். நிக்கரகுவாவின் இராணுவம் எதற்கும் தயாரான நிலையில் இருந்து வருகிறது.

பாக்கித்தானம்

பாக்கித்தானில் கலவரம்

பாகித்தானில் இரு இசுலாமிய இனங்களிடையே கலவரம் மூண்டுள்ளது. இது நாட்டில் பெரும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் பாக்கித்தானை இசுலாமியக் குடியரசாக்கும் இராணுவ ஆட்சியாளர் சியாவுல்கக்கின் முயற்சி, பாக்கித்தானிலுள்ள பெண்களின் சகல உரிமைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்று பெண்கள் அச்சமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

*************************************************

"வந்தேறிகளால் நொந்தழுவார்போல், கோடைக் கொடுமையில் வாடலானோம்!

புரட்சியின் புழுக்கத்தின்பின் பொதுவுடைமைபோல் புகுந்தது மாரியே!"

– புரட்சிப்பாவேந்தர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ **இத்தாலி**

**இரண்டாவது கே.சீ.பீ. உளவாளி சிறை!**

இந்நாட்டிலுள்ள உருசிய விமானப் போக்குவரத்துஅலுவலகமான ஏரோபிளாட்டில் ஐரோப்பாவில் உள்ள பலநாடுகளின் போர்க்கருவிகள், தளங்கள், முகாமையான செய்திகள் ஆகியவற்றைக்காட்டும் நுண்படங்கள் பல அண்மையில் இத்தாலியக்காவலரால் பிடிபட்டுள்ளன. இதனைத்தொடர்ந்து உருசியாவின் உளவு நிறுவனமாகிய கே.சீ.பீ.யைச் சேர்ந்த ஒருவரைப் பத்துநாட்களுக்குமுன் சிறைசெய்தனர். இரண்டாவது உளவாளியை இப்போது இத்தாலியக்காவலர் சிறைசெய்துள்ளனர். இவர் உருசியக்குடிமகனாவார்.

∴ **போலந்து**

**கோவிலுக்குள் காவலர்புகுந்து பூசைவேளையில் ஆள்வேட்டை!**

வரலாற்றில் முதன்முறையாக உருசியப்பிடியிலுள்ள போலந்துநாட்டுக்கத்தோலிக்கக் கோவிலுக்குள் போலந்து இராணுவத்தினர் புகுந்து ஆள்வேட்டை நடத்தினர். அப்பூசை அரசால் கலைக்கப்பட்ட தொழிற்சங்கமாகிய 'சொலிதாரிட்டி'யில் சிறைப்பட்ட, மாண்ட, சித்திரவதைப்பட்டு வருகின்றோர் கருத்து நிறைவேறுவதற்காக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. அப்பூசை வைக்க முன்னின்றவரான தொழிற்சங்கத் தோற்றஉறுப்பினரான காழிமியர் சுவிதோன் குடும்பத்துடன் பூசைகண்டுகொண்டிருந்தபோது சிறைசெய்யப்பட்டார். வண்டிக்கோளாறுகாரணமாக வரவிருந்த இலேசு வலேசா பூசைக்கு வராததால் தப்பினார்.

∴ **ஆபுகானித்தானம்**

**காபூல் நடுப்பகுதியில் இருவெடிவைப்புக்கள்!**

கடந்த பிப்ரவரி 22 அன்று-முன்னாள் இரவுமுழுவதும் காபூலில் உள்நாட்டுப் புரட்சியாளர்க்கும் உருசியப்பிடியிலுள்ள ஆப்கன் இராணுவத்தினருக்குமிடையில் கடுமையான துப்பாக்கிச்சூட்டிற்கும் பிறகு-தலைநகரமான காபூலின் நடுப்பகுதியில் காபூல்வானொலியும், உருசியர் தங்குமிடத்திலுள்ள வங்கியும் உள்ள இடத்தில் இரு வெடிவைப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இவை அவற்றைத் தகர்க்கும் நோக்கத்துடன் வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

∴ **கம்பூச்சியா**

**வியத்நாம் கம்பூச்சியாவில் உள்ள தன்படையைக் குறைக்கும்.**

உருசியப் படைவலிவைக்கொண்டு கம்பூச்சியாவை (கம்போடியா) ஆக்கிரமித்துக் கொண்டுள்ள வியத்நாம் அரசு இப்போது உலகநாடுகளின் வற்புறுத்தலுக்கிணங்கி, அ[illegible] நிலைகொண்டுள்ள தம்படையில் பெரும் குறைப்புச்செய்ய மு[illegible]ந்துள்ளது. இது குறித்த அறிக்கையை வியத்நாம் இந்தியாவில் ந[illegible]றவிருக்கும் நடுநிலை நாடுகளின் மாநாட்டில் (மார்ச் 7,1983) அறிவிக்கும் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ வங்காளதேசம்

பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

வங்காளதேசத்தின் இராணுவ ஆட்சியாளருக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் நாடுமுழுவதும் ஓர் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தின்போது வன்செயல்களும் இடம்பெற்றுள்ளன. காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் இறந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளனர். இதற்குமுன்னதாக இராணுவ அரசாங்கம் முன்னாள் சனாதிபதி முயிபுர் இரகுமானின் மகள் உட்பட நூற்றுக்கணக்கான மாணவர்களை சிறைசெய்துள்ளது. 30க்கு மேற்பட்ட அரசியற் தலைவர்களும் சிறைசெய்யப்பட்டனர். ஊரடங்குச்சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

∴ இந்தியா

அசாமில் வன்முறை! 3000க்கும் அதிகமானோர் படுகொலை!

சமீபத்தில் நடைபெற்ற தேர்தலின்போது அசாமில் வன்செயல்கள் பெருமளவு கட்டவிழ்த்து விடப்பட்டன. அசாமியர்களால் அங்கு குடியேறியவர்கள்-பெரும்பாலும் இசுலாமியர்கள் கத்திகளாலும், ஈட்டிகளாலும், பொல்லுகளாலும் கோரத்தனமாகக் கொலைசெய்யப்பட்டுள்ளனர். கொலையுண்டவர்களின் எண்ணிக்கை3000க்கு மேல் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு பிரதம மந்திரி இந்திராகாந்தி வருகைதந்து தாக்குண்டவர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார். காயமுற்றோர்க்கு சிறப்புச்சிகிச்சை வசதிகளும் பாதுகாப்புக்கு 150,000க்கும் மேற்பட்ட இராணுவத்தார்குவிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து ஆங்காங்கே கொலைகளும், நாடுவிட்டு அகதிகள் ஓடுதலும் நடைபெற்றுவருகின்றன.

இந்திராகாங்கிரசு அசாமில் வெற்றி!

இத்துணைக்கொலைகளுக்குமிடையில் 90% மக்கள் வாக்களிக்கமறுத்துவிட்ட நிலையில் பொதுத்தேர்தல் ஒருவாறாக முடிவடைந்தது. இதுவரை அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி அசாமிலும், மேகாலய நாட்டிலும் இந்திரா காங்கிரசு பெரும்பான்மைபெற்று வெற்றியீட்டியுள்ளது.

∴ சிங்கப்பூர்

அமெரிக்கச் செய்தியாளர் வெளியேற்றம்

சிங்கப்பூரில் நிலவிவரும் மதஒற்றுமை உணர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும்வகையில் செய்திதந்த அமெரிக்கச் செய்தியாளரைச் சிங்கப்பூர் அரசு வெளியேற்றியுள்ளது. அந்நாட்டுத் துணைப்பிரதமராகவுள்ள தமிழரான சின்னத்தம்பி இராசரத்தினம் இதுகுறித்து விளக்கம் அளிக்கையில் இது கலகமூட்டிகளுக்கு ஓர் எச்சரிக்கை என்று கூறினார்.



Sinnathamby Rajaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் எரிமலையாகிறது!

தோழா!

சென்ற இதழில் ஆங்கிலோ-தமிழ் எனக்குப்புகுத்தியதுபற்றிக்கூறினேன். இப்போது என் உயிரெல்லாம் பதிந்த விடுதலைப்பாதையில் ஏற்பட்டுள்ள சில அனர்த்தங்கள் பற்றி சிலகூற விரும்புகிறேன்.

இது காந்தி வாழ்ந்த காலகட்டமல்ல! இது ஆயுதக்காலம். அகிம்சை இப்போது செல்லாது. இதன்படி ஈழப்போரும் ஆயுதவழியேதான்! ஆனாலும் இதற்கான முழுஆயத்தங்களும் முற்றுப்பெற்றுள்ளதா? இன்றைய போராளிகளின் உயிர்வெறுத்த வீரப்போராட்டங்களின் விளைவுகள், அவர்களை முகாம்களில் முடக்கிவிடுவதால், கொள்கைரீதியிலான மக்கள் குழுக்கள் அமைவது தடைப்படுகின்றது. முழுப்போர் நடத்தும் காலத்தில் மக்க்ள் கைகளில் கருவிகளும் நெஞ்சங்களில் கொள்கையும் அமைதல் வேண்டும். இன்று சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு ஆட்சிக்குள் உள்ள எல்லாத்தமிழரும் ஈழவாதிகளே! இவர்களில் எழுந்த கோரிக்கை என்ற உணர்வுக்கு கொள்கை வலுவூட்டிப் போராளிகளாக மாற்ற வேண்டியது இயக்கங்களின் கடமை. உணர்வுகள் அடிப்படையில் தூ[illegible]க்கப்படுகின்ற ஆயுதங்களின் நேரடி விளைவுகள், எதிர்மாறாக அமைந்துவிடலாம். இன்று நடைபெறுகின்ற இராணுவ அட்டகாசம், வங்கதேசத்தின் நிலையை அடையுங்கால், மக்கள் தம்மைக்காக்க கண்டிப்பாக ஆயுதம் ஏந்தியே தீர்வர். ஆகவே அதற்குமுன்பே அவர்களைக் கொள்கைவழிப்படுத்த வேண்டியது இளைய தலைமுறை – புதுப்போக்கு – சமூக உணர்வுபடைத்தோர் – இயக்கங்களின் கடமையாகும். ஆகவே தோழா!

முன்னர் உன்னைக் கொள்கைவழியில் நிலைப்படுத்து! பின்னர் உன் குழாமினை உறுதிப்படுத்து! இதனால் உன்னோடு உறவாடும் தமிழீழவர் ஈழமிசத்தில் நிலைப்படுவர். சிந்திப்பாயா? மேலும் ஒன்று தோழா! இதுதவிர இயக்கங்களில் தனிமனிதப் போக்கும், குழுவழி அமையும். உனக்குப் புரிகிறதா? அரசியல் வாதிகள் எல்லாரும் போராளிகள் அல்ல. போராளிகள் எல்லாரும் அரசியல்வாதிகளும் அல்லர். ஆனால் அண்மைக்கால செயல்கள், போராளிகளின் தனிமனிதப்போக்கு அரசியல்வாதிகளை ஒத்ததாக அமைந்துள்ளது. வருத்தங்களும் செயலாக அமைகிறது. இலட்சியம் ஒன்றே! அது ஈழமிச மக்களின் சோசலிச வழி அமைந்த தமிழீழமக்களின் தனிநாடு. ஆனால் அதன்பாதைவேறாக உள்ளது. பாதைகளுக்கெல்லாம் முடிவு உண்டுதான். அது ஒரு சந்தியில் சந்திக்கும்போதுதான் தானே முடிந்துவிடுகிறது. அதில் சந்தியென்கின்ற ஈழம் அமையும். ஆனால் இந்நேரத்தே இயக்கங்கள் (பாதைகள்) கொள்கைவழிப்படுத்தி ஈழப்–போராட்டத்தில் பேதங்களைப் பெரிதுபடுத்தாமல் தமது பங்குபற்றச் செய்யும் பணியைச்செய்யவேண்டும்.

∴தோழர் வானு∴

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூலம் பிரெஞ்சு

(பாகம் 13)

இந்த இதழில் சில முக்கியமான pronoms ஐப் பார்ப்போம். நாம் ஏற்கனவே pronom என்றால் என்னவென்று பார்த்துள்ளோம். அதாவது ஒரு பெயர்ச்சொல்லுக்காக வேறொரு சொல்லைப் பிரதி பண்ணுவதாகும்.

Moi. Toi. Lui. Elle. Nous. Vous. Eux. Elles.
(m s) (f s) (m p) (f p)

(உ-ம்)

Moi, j'ai un Fruit.

(என்னைக் காட்டி அல்லது குறிப்பிட்டு) (நான்) என்னிடம் ஒருபழம் இருக்கிறது.

Toi, tu as une cigarette.

(உன்னைக் காட்டி) (நீ) உன்னிடம் ஒரு வெண்சுருட்டு இருக்கிறது.

Lui, il a un briquet.

(அவனைக் காட்டி) (அவன்) அவனிடம் ஒரு (தீ பற்ற வைக்கும் கருவி) இருக்கிறது.

Elle, elle a des gants.

(அவளைக் காட்டி) (அவள்) அவளிடம் சில கையுறைகள் இருக்கின்றன.

Nous, nous avons des livres.

Vous, vous êtes professeur.

Eux, Ils sont étudiants.

Elles, elles ont des robes.

அவர்கள் (F), அவர்களிடம் சட்டைகள் இருக்கின்றன/வைத்திருக்கின்றார்கள்.

உதாரணமாக Jean est devant moi.

Marc est derrière lui.

Il est devant eux. (Jean et Marc)

Feminin ஆக இருந்தால்

Il est devant elles.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு : Je என்பதும் Moi என்பதும் ஒன்றுதான். ஆயினும் Je பெயர்ச்சொல். Moi இதைப் பிரதியிடும் ஒரு பிரதிச் சொல்.

Je - Moi

Tu - Toi

Il - Lui

Elle - Elle

Nous - Nous

Vous - Vous

Ils - Eux

Elles- Elles.

Il y A. இச் சொற்றொடர் ஒரு தனிச் சொல்லாகவே பாவிக்கப் படுகிறது. Il அது Y அங்கே (இடம்) A (இணைச்சொல் இருக்கிறது). அதாவது உதாரணமாக,

Il y a de l'eau là-haut

அங்கே (இருக்கிறதா?) மேலே தண்ணீர் இருக்கிறதா?

Il y a cinq livres dans l'armoire

அங்கே 5 புத்தகங்கள் அலமாரியினுள் இருக்கிறது. இது கேள்வியாக மாறும்போது,

Y a-t-il cinq livres dans l'armoire?

இங்கு a க்கும் il க்குமிடையில் ஒரு t உபயோகிக்கப்படுகிறது. ஏனெனில் 'யா இல்' என்பது உச்சரிப்புக்கு உறுதியில்லாததால் இடையில் ஒரு t ஐ உபயோகித்து 'யாத் தில்' என்று உச்சரிக்கப்படுகிறது. இதில் t க்கு எந்தவித அர்த்தமும் இல்லை.

Vocabulaire:

| | | |
|---|---|---|
| la chausette --- | லா சோ(sh)செத் | – காலுறை |
| la bas - | லெ பா(b) | – பெண்களின் நீளக்காலுறை |
| la chemise - | லா ெ(ch)சமீசு | – சட்டை |
| le bouton - | லெ பூத்தோன் | – பட்டன் |
| la blouse - | லா ப்ளூசு | – பெண்களின் மேல் சட்டை |

( வளரும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன விடுதலை

## 8. உலகின் இருமுனைகளில் தமிழர்!

∴ காமன் ∴

"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்குஒலி ஞாலத்து இருளகற்றும் ஆங்குஅவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர் ஒன்று; ஏனையது
தன்னேர் இல்லாத் தமிழ்!"
(பழம்பாடல்)

என்று ஆன்ருேர்களால் உலகத்துக்கு ஒளிவழங்கும் இருபொருட்களில் ஒன்று கதிரவன்; மற்றது தமிழ் என்று போற்றப்பட்டதன் பொருள் என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். உலகின் மூத்தகுடி என்று பெருமைபேசும் தமிழர் கடலால் சூழப்பட்ட உலகின் இரு முனைகளிலும் பரவியிருந்தனர் என்பதற்குச் சான்றுகளை மேனாட்டார் இப்போது நிரம்பக் கண்டுபிடித்துத் தந்துள்ளனர். வடதுருவம் எனப்படும் வடவையை மேனாட்டார்க்கு இப்போதுதான் தெரியும் (1800ஆம் ஆண்டு)! ஆனால் உலகம் சுற்றிய தமிழனுக்கு கி.மு. ஏழாம் நூற்ருண்டுமுன்னமே வடவையைத் தெரியும். வடவனல் என்று அதைக்குறித்துவைத்தவன் தமிழன். வடமுனையின் மேற்பாதியை வட அமெரிக்காவும், கீழ்ப்பாதியை உருசியாவும் வளைத்துக் கொண்டுள்ளன. வடமுனைக்கும் உருசியாவுக்கும் இடையில் இருப்பது 'கரை' என்ற பேருள்ள கடல் ஆகும். முற்காலத்தில் இப்பகுதி கரையாக இருந்திருக்கவேண்டும். அதனல்தான் அன்றுதமிழன் அதற்கிட்ட கரை என்னும் பெயர் இன்றுவரை மாருமல் இருந்து வருகின்றது. அங்கிருந்து உருசியநாட்டுக்குள் வந்துள்ள நீண்டதொருமலைத் தொடருக்கு 'ஊரல்' என்ற பெயர் இருப்பது ஊன்றிக்கவனிக்க வேண்டிய ஒன்ருகும். உருசியாவிலிருந்து சப்பானை நோக்கியுள்ள சிறு தீவுக்கூட்டத்திற்கு 'குறில்' என்ற பேருள்ளது எத்துணைப் பொருத்தம். இன்னும் மேற்சொன்ன 'கரை'க் கடலை யொட்டியுள்ள உருசியமாநிலம் ஒன்றன் பெயர் 'தமிர்' என்பதாகும்! கரைக்கடலின் அருகில்உள்ள ஊருக்கு 'வைகட்ச்' என்ற பேரிருப்பது 'வைகை' என்னும் மதுரை ஆற்றின் பெயரை நமக்கு நினைப்பூட்டுவதாக இல்லையா?

தென்முனையிலிருந்து 'தென்னை' கொண்டுவந்து பயிரிடப்பட்டது. இன்றும் தென்கண்டங்களில்மட்டுமே தென்னை விளைவதையும், தென்னை என்பதில் உள்ள 'தென்' என்னும் சொல் தென்னவன் என்பதிற்போல தென்தமிழ் நாட்டைச் சிறப்பாகச் சுட்டுவதைக் காணுங்கள். வடமுனை ஒருபுறம் அமைதி மாகடலாலும், மறுபுறம் அட்லாண்டிக்குக்கடலாலும் சூழப்பட்டுள்ளது; இவ்விரு மாகடல்களும் தென்முனைவரை வந்தபோதிலும் கிட்டத்தட்ட இரண்டும் சேர்ந்தால் அமையுமளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமாகடல் என்னும் தென்மாவாரி பரந்து அகன்றுள்ளது. வடமுனை
யருகில் 'அலாசுகா'வில் அமெரிக்கரும், கிரீன்லாந்தில் ஐரோப்பிய
ரும், சைபீரியாவில் உருசியருமாக கன்னெய் (பெட்ரோல்), எரிவ
ளி (எரிக்கும் வாய்வு), பொன், வைரம் போன்ற கனிப்பொருட்க
ளை எடுத்து வந்துள்ளனர். இதுவரைத் தென் முனையில் அவ்வண்ணம்செ
ய்ய எவரும் முன்வராமல் இருந்தனர். ஆங்கிலராலும், அமெரிக்கரா
லும் ஆத்திரேலியராலும் சிறுசிறு திட்டுக்கள் பாதுகாக்கப்பட்டு வந்த
போதிலும் அந்நிலத்தின் வளம் இன்னும் முற்றுக எடுக்கப்படவில்லை. இ
ப்போது எல்லாநாடுகளின் கவனமும் தென்கண்டம் எனப்படும் 'அண்
டார்டிக்கா'மீது திரும்பியுள்ளது.

ஆத்திரேலியா, ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்
கா என்னும் ஐம்பெருங்கண்டங்களுக்கும் தென்கடலில் (இந்துமாகடல்)
வணிகம், போக்குவரத்து, அஞ்சல்-வானொலித் தொடர்பு, படைக்க
லங்களைக் கொண்ட கப்பல்கள் செல்லல் போன்ற இன்றியமையாத
நெடும்பாதையாக தென்கடல் அமைந்துள்ளது. தென்கண்டம் வடகண்ட
த்தைவிடவும் ஏறத்தாழ 2 பங்கு அளவிலானது. இப்போது இங்கே
புதுப்புதுக்கருவிகளைக்கொண்டு பனிஉறைந்துள்ள பகுதிக்கும் கீழேயிருந்
து செல்வங்கொழிக்கும் பல பொருட்களை எடுக்கும் முயற்சியில் எல்
லாத் தென்புறக் கண்டங்களின் நாடுகளும் அதிக ஆர்வமும், அந்நிலத்
தின்மீது - அஃதாவது, தென்னுப்பிரிக்கா அதற்கு நேரான தென்கண்
டப்பகுதியின்மீது உரிமை கொண்டாடுவது போல - உரிமைகொண்டா
டியும் வருகின்றன.

இப்படிப் பார்த்தால் முறைப்படி தமிழ்நாட்டுக்கும், தமிழ் ஈழ
த்திற்கும் தென்புறத்தில் உள்ள பெரும்பகுதி தமிழ் இனமக்களுக்குடை
மையாக வேண்டும். ஆனால் இந்திய அரசும் சிங்கள அரசும் ஆரியஅர
சுகளாக இருப்பதால், நம் இனத்தை மேல் எழவிடாமல் ஆட்சியதி
காரக் கெடுபிடிகளால் நம்மை ஆள்வதுடன் நமக்குச் சட்டப்படிசேர
வேண்டிய தென்கண்டத்தின் நிலப்பகுதியை தமிழர்களே உரியமுறைப்படி
பயன்படுத்தி அதன் பொருட்களைப் பெற்று வளம் ஓங்குவதற்கு முட்டு
க்கட்டைகளாக இருப்பதுடன், நம்கண்ணெதிரே அச்செல்வத்தைக்கொ
ள்ளையடித்துச் செல்லும் கயவர்களாகவும் உள்ளனர். தனக்கெனஒரு
'கையளவு' நாடுதானும் இல்லாதத் தமிழனின் ஏழைக்குரல் எப்படி
உலக அம்பலத்தில் ஏறும்?

இந்திய நாட்டின் கிழக்குப் பகுதிநாடுகளாகிய ஆசாம், வங்கா
ளம், நாகநாடு, பஞ்சாப்பு என்னும் சீக்கியநாடு ஆகிய யாவும் இ
ப்போது பிரிவினை கேட்டுப் போர்க்கொடி உயர்த்தி வருகின்றன.
இந்த நேரத்தில் தென்னட்டுத் தமிழர்களாகிய நாமும் போர்க்குரல்
கொடுத்தால்தான் அது விரைவில்தனிநாடாகவுள்ள இந்திய மாநிலங்க
ளில் தமிழகம் உரியபங்குடனும், நில எல்லையுடனும் தக்கபடி பிரிவத
ற்கு அடிக்கோல் அமைத்ததுபோல் ஆகும். அண்டையில் உள்ள நம்மரு
ந் தமிழ் ஈழ மறவர்களின் உயிர்கெடப் போராடும் ஊக்கப்போருக்
கு நம்மை அதிகமதிகமாக இணைத்துக் கொள்வதாலும், அதற்குநாம்
தரும் அரசியல் முகாமை, விளம்பரம் ஆகியவற்றாலும் நாமும்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்குச் செல்ல அணியமாவதாக அமையும். உலகில் இன்று நாடுகேட்
டுப் போராடும் நாடுகள் பலப்பல! ஆனால், அன்று காந்தியடிகள்
செய்ததுபோல அமைதிவழியாகப் போரானாலும் பயன்இராது; பலத்
தீன விடுதலைமறவர்கள் அன்றாடம் வதைக்கும் சிறைக்கும் கொலைக்கு
ம் அழிப்புக்கும் இடையில் தக்கதுணை தக்கநேரத்தில் கைகொடுப்பா
ர் இன்மையால் தன்னாட்டையும் தான் இழந்து, பிறநாட்டில் ஏதிலிகள்
என்று இருப்பதுபோல் ஆனாலும் விடுதலை கிடைக்கக் காலம்செல்கின்ற
து. ஈரானில் மன்னராட்சியை ஒழிக்கக்கிளம்பி மதவெறியராம் மடக்
கோமேனி முறையில் பூசலிட்டு உரிமைவேண்டினாலும் விளைவைவிட காலி
ல் மிதிபடும் பயிரினமே மிகுதி என்றாகிவருகின்றது. இந்நிலையில் இருப
தாம் நூற்றாண்டில் – கல் நெஞ்சும் கொலைச் சுவையும் கொண்ட-
30 நூற்றாண்டுகளாக நம்மைப் பலவடிவில் அடிமைப் படுத்தி ஆண்டு
ஆதாயம் அனுபவித்த ஆரியக் காட்டுவிலங்காண்டிகள் நாம் 'தா'என்
றால் விடுதலையைத் தராததுடன், உலகநாடுகள் நடுவில் இந்திராகா
ந்தி போன்ற அமைதியாளர் என்பதாகவும், செயவருதனைப்போல
மக்களாட்சி மாண்பறிந்த தேர்தல் புலி என்பதாகவும் போலிப்புனை
வும் பொய்க் காட்சியும் காட்டி மற்ற நாடுகளை ஏய்த்து, நமக்கு
துணைவர எவரும் இல்லாத வண்ணம் செய்தும் வருகின்றனர்.

இந்நிலையில் ஓரினத் தமிழர் சாதி, மதம் என்ற குறுகிய கூண்டு
களுக்குள் தம்மைத்தாமே பிரித்து வைத்துக் கொண்டு எதிரிக்கு இளை
க்காரமாக ஆகிவரும் தமிழர், இப்போது கட்சி என்னும் பேரால்
'எதிரியின் கோழி இவனுக்கு வாத்து ஆகக் காணப்படும்!' என்றாற்
போல, அடுத்தவன் 'இந்தி ஒழிக!' என்னும்போது, இவன் 'தமி
ழ் ஒழிக!' என்று குருட்டடியாகக் கூறுவதையும், கூட்டணி கொண்டு
வேட்டொலி முழக்கி நாட்டுவிடுதலையைப் பெறப் போவதாக முழ
க்கியவர்கள், பதவிச் சீட்டணி ஆகி பகைவனுக்கு பாட்டொலி இசை
த்து பல்லிளித்துக் கிடப்பதையும் உடனடியாக மாற்ற வேண்டும். இன்
றேல் அவனைப் பழிவாங்கும் போக்கை அப்புறம் வைத்துக்கொள்ள
லாம் என்று தீர்மானித்து, மற்ற தமிழர் முடிந்த வகையெல்லாம்
விடுதலைக்கு ஒத்துழைக்க ஒன்றிணைய வேண்டும். எங்கெல்லாம் தமி
ழின நன்மைக்கு – விடுதலைக் கோரிக்கைக்கு – இடையூறும் இன்ன
லும் தோன்றக் கூடுமோ அதனை எப்படி விலக்கிக்கொண்டு மேற்செ
ல்லலாம் என்பதிலேயே தமிழர் இனிக் கவனம் செலுத்தியாகவேண்டு
ம்.

கல்விக் கொள்கையில் கையை வைத்து, நம்மவர் மூளைக்குச்
சோம்பலைத் தர எதிரி எண்ணுவதனை முறியடிக்க நம்மவர்க்குதவு
ம் எழுத்துக்களை செய்தித்தாட்கள் தரும்வண்ணம் அதனை ஒருகுழுவின
ர் நெருக்குதல் வேண்டும்; தமிழ்த்திரைப்படங்களில் ஒருபிரிவார் ந
ம் கருத்துக்களுக்கு இடமளிக்காத படங்களைக் கொளுத்துதல் போ
ன்ற அச்சுறுத்தலைக் காட்டி நம் கொள்கை அங்கே எதிரொலிக்க
ச் செய்ய வேண்டும். இன்னும் குடும்பத்தில் தமிழ் உயர்வும் உரிமை
யும் ஊறிடும்வண்ணம் நல்லதமிழ்ப்பெயர்களையே வைத்தல் வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

தமிழ் முரசு
முரசு 1 | TAMOUL MOURASSOU | ஒலி 1

# எண்ணம்

எண் 1
இல: 5
1982 கார்த்திகை
கொடுதலை! கொடு உயிர்! விடுதலை குமிழ்க்கும்!

01.02.1983

"THE LANGUAGE IS THE IMMEDIATE ACTUALITY OF THOUGHT"
:- BY. MARX AND ENGELS

காலத்தின் கோலத்தால் துர் அதிர்ஷ்டம் நிரம்பிய தமிழ் இனமாகத் தோற்றம் எடுத்தது தமிழ் இனமும், துர் அதிர்ஷ்டமும் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த இரட்டைக்குழந்தைகள் அல்லவே. இப்பாவம் செய்த இனத்தின் விடிவுக்காக இரவாசமாக உழைத்தவர்கள் எல்லோருமே தான் இறுதியில் சறுக்கித் தோல்விப் பயிற்சியாளர்களாகவே இருந்தார்கள். ஏமாற்றமும், விரக்தியும் அவர்களுக்கு வரலாறு கொடுத்த நோபல் பரிசுகளாகும். தமிழ் மொழியிற் செழித்துள்ள தத்துவ வளமையால் இவ்விதியை நிர்ணயித்தனர்கள் தோல்வி மனப்பான்மை வாதிகளாக மாறுதல் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இத் தோல்வி மனப்பான்மைச் சுழலினில் சருகுகள் போல் அள்ளுப்பட்டவர்களுக்கு புறம்பாக ஒர் சில தமிழர் இன்னும் அங்காங்கே மிஞ்சாமல் இல்லை. இவர்களை தமிழினத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களாகும். இவர்களின் ஒரு பகுதியின் யதார்த்த பிரதிபலிப்புத்தான் 'எண்ணம்' தமிழ் ஏடாகும்.

இது தமிழ் மக்களின் விடிவுக்காக உதித்த தமிழ் ஏடுகளான சுதந்திரன், மாணவர், புதியபாதை, செங்கதிர் போன்ற வரிசையில் ஒரு வித்தியாசமான புதிய உள்ளடக்கமும், புதிய நடையையும் கொண்டது உண்மையாகும். இதன் கடைசி இரு பிரசுரங்களும் இதன் நிலைப்புடையவர்களின் உதவிகளுக்கும், அதனைப் புறத்திற்கும் பரிச்சயம் இல்லாத எழுத்தாளர்களான சொற்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. அவைகளுட் சில சோமணி, இலையன், இசையல், பாக்கியத்தனம், எம்.பி.ஜி. இச் சொற்கள் பல தசாப்தங்களாக சோமணி, லெபனான், இஸ்ரேல், பாக்கிஸ்தான் எம். ஜீ. ஆர்

என்ற கருத்துக்கொண்ட எழுதப்பட்டுவந்தது. ஒரு சொல் எந்த மொழியிலாவது இருந்தாலும் என்று எழுந்த மானத்தில் உருவாகுவதில்லை. அச்சொல்லைப் பிறக்கவைக்கிய வரலாற்றுச் சக்திகளை ஒன்றுண்டு. அது பிறந்து வரலாற்றில் அடிபட்டு, உழம்பட்டு ஒரு வடிவத்தை எடுக்கிறது. அது தன் மொழியிற் பிறந்தால் என்ன பிறமொழியிற் பிறந்தால் என்ன, அல்லது வேறு மொழியோடு புணர்ந்து பிறந்த சொல் என்றால் என்ன? சமுதாயப் பாவனையால் செதுக்கப்பட்டு ஒர் கெட்டியான உடலமைப்பை எய்துகின்றது. உதாரணமாக Boy என்ற ஆங்கிலச் சொல் பல தசாப்தமாக போய், பாய் என்று பாவிக்கப்பட்டு கடைசியில் பையன் ஆகியது. கறி என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்தால் களவாடப்பட்டு மீண்டும் தமிழில் வந்தபோது கறி ஆகியது. மலைகூடம் என்ற சொல்லில் அர்த்தப்படுத்தும் கலம் (ஜலம்) என்ற சமஸ்கிருத சொல்லிருந்து பதிலாக மலைக்கூடமென்றோ, மலைநீர்க்கூடமென்றோ, மலைநீர்க்கூடமென்றோ எழுதினாலும் மரபுவழிப் பாவிப்பு போன்று பழக்கத்தை விடவேண்டியதில்லை. இதுபோன்று நடேசனார், கேற்வாசல், போத்தல் சோடா, பிளேன்டீ, கோப்பி போன்ற சொற்கள் தம்பேறாடு தமிழாகிவிட்டன. பிளேன்டீயின் தமிழ் சொல்லான தேனீர் என்பதைப் பாவிக்க வேண்டுமென்று சொல்லிய தமிழ் பண்டிதர்கள் இன்று ஓய்ந்து விட்டார்கள்.

'எண்ணம்' விமர்சனம் தொடர்பான 'தமிழ் முரசின்' கருத்து மறுபக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட வசதியின்மையால் 'எண்ணம்' விமர்சனத்தின் முழுப்பகுதியையும் வெளியிட முடியாமைக்கு வருந்-துகிறோம்.

இது தொடர்பான 'தமிழ் முரசின்' கருத்து . . . .

ஒரு மொழியில் ஏற்படும் பிறமொழிகளின் ஊடுருவல் அம்மொழியை பேசும் இனத்தின் பண்பாடு, பாரம்ப-ரியம், இன அபிமானம் போன்றவற்றிலும் ஊடுருவி விடுகின்றது. இதற்கான சமீபகால உதாரணங்கள் மொரிசியஸ், மாட்டினிக் தீவுகளில் வாழுகின்ற தமிழ் மக்கள். இன்று இவர்களில் பெரும்பான்மையோர் பெயரளவில்தான் தமிழ் மக்களாக இருக்கிறார்கள். தமிழ் மொழியை பேசத் தெரியாதவர்களாக மாறிவிட்டார்கள். இதற்கான ஆரம்பக் காரணம் இவர்களது மொழியில் ஏற்பட்ட ஊடுருவலே.

எனவே இத்தகைய நிகழ்வுகள் ஈழத்தமிழினத்துக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் விடுதலைப் போராட்டத்தில் மொழியின் பங்களிப்பை சமமாக வளர்த்துச் செல்வதற்காகவுமே தமிழ் முரசு தனது எழுத்து நடையில் வடமொழிப் பாவிப்பை தவிர்த்து தனித் தமிழைக் கையாளத் தொடங்கியது. இந்நடைமுறை ஆரம்பகால கட்டத்தில் வாசகர்கட்கு சிறிது சிக்கலை கொடுப்பதாக இருந்தாலும் காலம் அதனை சீராக்கிவிடும் என எண்ணுகிறோம். ஏனென்றால் தமிழ் எம் உயிரிலும் மேலானது. அது தாழ்மையுறுவதை நாம் அனுமதிக்கலாமா? எனவே எம் முயற்சியை 'எண்ணம்' உட்பட எமது வாசகர்கள் புரிந்து கொள்வதுடன் இம்முயற்சிக்கு தமது ஆதரவுகளையும் தருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் நடேசுதாசனுக்கு இழைத்த கொடுமைகள்!

ஆகஸ்ட் 8ஆம் திகதி மத்தியானம் வரை என்னை பலாலி இராணுவ முகாமிலுள்ளவிருந்தையில் சங்கிலியால் பிணைத்துவைத்திருந்தனர்.

## சங்கிலியால் பிணைத்தனர்

மத்தியானத்திற்குப் பின் என்னை அறைக்குக் கொண்டு போனார்கள். அறையில் கட்டிலுக்குப் பக்கத்தில் என்னை உட்கார்ந்த நிலையில் இருக்கும்படி உத்தரவிட்டனர். என்னை அங்கும் பிணைத்து வைத்திருந்தனர். எனக்கு உணவு வழங்கப்படவில்லை.

மாலை 4 மணியளவில் சோறும் சம்பலும் உணவாகத் தரப்பட்டது. என்றால் அதனை சாப்பிட முடியவில்லை. தண்ணீர் குடிக்காததால் எனது தொண்டை வரண்டிருந்தது. வாய்ப் புண்ணும் இருந்தது. சுகவீனம் காரணமாக கையை தூக்க முடியவில்லை. இதனால் சாப்பிட முடியாதிருந்தது.

உணவு தந்த பிறகு மாத்திரை தந்தனர். 8ஆம் திகதி காலை எனது புண்களுக்கு மருந்து போடப்பட்டது.

எனது புண்களை கழுவிவிட்டு பாண்டேஜ் சுற்றினார்கள். என்ன மருந்து போட்டார்கள் என்று தெரியவில்லை. முழங்கால் காயத்துக்கு பாண்டேஜ் கட்டினார்கள் முழங்காலுக்கு கீழே இருந்த புண்ணுக்கும் மருந்து போட்டனர். கையில் இருந்த புண்ணைக் கழுவி மருந்து போட முயன்றபோது லெப்டினன் மாயாதுன்னே என்னை காலால் உதைத்தார். மருந்து போட வேண்டாம் என்றும் உத்தரவிட்டார்.

8ஆம் திகதி இரவு ஒன்பது மணிக்குப் பின்னரே என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

## நித்திரை செய்ய அனுமதியில்லை

அறைக்குள் கொண்டு போகப்பட்டாலும் நித்திரை செய்வதற்கு எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

8ஆம் திகதி இரவு 9 மணியளவில் இருவர் மேசையில் அமர்ந்து கேள்வி கேட்டு ஏதோ எழுதிக்கொண்டிருந்தனர். அங்கு இன்னும் சிலரும் இருந்தனர். சுமார் இரண்டு மணித்தியாலம்வரை கேள்விகள் கேட்கப்பட்டன.

தரையில் படுத்த நிலையில் இருந்தபடிதான் கேள்விகளுக்கு பதில் அளித்தேன்.

கேள்விகள் கேட்ட இரண்டு அதிகாரிகளின் பெயர்கள் தெரியாது. இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஷெஹிர் அங்கு இருந்தது தெரியும்.

-இ-சைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் பற்றியும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது பற்றியும் நீர்வேலி வங்கி [illegible] பற்றியும், கொள்ளையிடப்பட்ட பணம் பற்றியும், அதில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றியும் என்னிடம் கேட்டனர்.

அப்போது தாக்கப்படவில்லை. சித்திரவதை செய்யப்படவில்லை. ஆனால் நித்திரை செய்யச் சொல்லி, திடீர் திடீரென எழுப்பி கேள்விகள் கேட்டனர். இப்படி அடிக்கடி செய்தனர். மிகவும் சாந்தமாகவே என்னுடன் கேள்விகள் கேட்டனர்.

ஏறக்தாழ இரவு பத்து பத்தரை மணியளவில் அவர்கள் அறையை விட்டு வெளியேறினார்கள்.

ஆகஸ்ட் ஒன்பதாம் திகதி பலாலி இராணுவ முகாமில் வைத்து பொதுவாக சிலர்வந்து கேள்விகள் கேட்டனர். அவர்கள் யார் என தெரியாது

ஒன்பதாம் திகதி காலை உணவு தரப்படவில்லை. காலை பதினொரு மணியளவில் கால் இறாத்தல் பாணும் சம்பலும் தரப்பட்டன.

## கொடுத்த உணவை சாப்பிட முடியவில்லை

நான் அப்போது மிகவும் பசியாக இருந்தேன். ஆனால் அந்த உணவையும் என்னால் சாப்பிட முடியவில்லை. தொண்டை காய்ந்திருந்தது. வாய்க்குள் புண்கள் இருந்ததால் சாப்பிட முடியவில்லை.

உணவு கொடுக்கப்பட்டதும் எனது முகத்தை துணியினால் சுற்றிக் மூடிக் கட்டி என்னை ஆனையிறவு இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர். எனது முகத்தை மூடிக் கட்டியவர் ஒரு இராணுவத்தினர். எங்கே கொண்டு போகப்படுகிறேன் என என்னிடம் கூறப்படவில்லை. என்னைத் தூக்கிச் சென்று ஜீப் வண்டியில் ஏற்றினார்கள். நடக்கமுடியாத நிலையிலேயே நான் இருந்தேன். முழங்கால் தாக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்ட காயத்தினாலும், வலது காலில் இருந்த கடுமையான காயம் காரணமாகவும் என்னால் நடமாட முடியாத நிலை இருந்தது.

என்னை ஜீப் வண்டிக்குள் மல்லாந்த நிலையில் தரையில் கிடத்தினார்கள்.

ஆனையிறவு முகாமில் என்னை மாடிக்கு இரண்டு பேர் என்னை தாங்கிய நிலையில் எனது இடது காலால் மட்டும் தத்தித் தத்திச் சென்றேன்.

நீள் சதுரமாகவோ, சதுரமாகவோ அந்த அறை இருக்கவில்லை. ஒரு ஜன்னல் இருந்தது கண்ணாடியிலான அந்த ஜன்னல் உட்புறமாக மூடி உட்புறமாக அலுமாரிக்கு பலகை அடித்து கட்டிலையும் போடப்பட்டிருந்தது. ஒரு கையில் விலங்கு போடப்பட்டு கைவிலங்கின் மறுபகுதி கட்டிலில் பதிக்கப்பட்டிருந்த இரும்பு [illegible]

இல் பூட்டப்பட்டது. அதன் பிறகு என்னிடம் கேள்விகள் கேட்கப்படவில்லை. பலாலியில் எனக்கு உணவு வழங்கப்பட்ட போது முதல் நாள் இரவைப் போலவே மருந்து போட்டனர். அதன்பிறகு எனது புண்களுக்கு மருந்து போடப்படவில்லை. வருத்தம் காரணமாக நித்திரை செய்யமுடியாத நிலையில் இருந்தேன். எனது உடலில் எல்லாபகுதியிலும்வேதனை இருந்தது. வலது காலில் வேதனை அதிகமாக இருந்தது.

ஆகஸ்ட் பத்தாம் திகதி மாலை ஆறு மணியளவில் என்னிடம் கேள்விகள் கேட்கப்படவில்லை சிலசம்பவங்களைக் குறிப்பிட்டு அந்த சம்பவங்களில் நான் சம்பந்தப்பட்டிருப்பதாகக்கூறி வெவ்வேறு நபர்களைப்பற்றி கூறியபடி வெருட்டிக் கொண்டிருந்தனர் மேஜர் அல்கமவும் இன்னும் சிலருமே இப்படி கூறினார்கள். மற்றவர்களை எனக்குத் தெரியவில்லை.

'எனது வலது காலில் புண் பெரிய துவாரமாக இருந்தது. சுமார் ஒன்றரை அங்குல அகலமும் 3 அடி நீளமுமான 3 பண்டேஜ் துணிகள் புண்ணுக்குள் நுழைத்துமேலே துணி சுற்றப்பட்டது.'

என்னைக் கைது செய்த போது இராணுவ லெப்டினன் மாயாதுன்னே என் கையில் கட்டியிருந்த மணிக்கூட்டையும் கழற்றி நிலத்தில் எறிந்து அதைக் காலால் மிதித்துத் தூளாக்கினார்.

என்னை உதைத்து ஜீப்பினுள் தள்ளினார். நான் ஜீப்பினுள் விழுந்தபின் ஒருபொலிஸ் அதிகாரி வந்து என் தலை மயிரைப் பிடித்து உலுக்கியதுடன் என் கைவிரல்களை பின்புறமாக மடக்கி வேதனைப்படுத்தினார்.

லெப்டினன் மாயாதுன்னே அதன்பின் வந்து நான் அணிந்திருந்த சாரத்தைக் கழற்றி அதைக் கிழித்து என் கால்களைக் கட்டினார். கால்களை ஜீப்பிற்கு வெளியில் போட்டு கதவினால் கால்களை நெருத்தார்கள்.

பின்பு சில அதிகாரிகள் முழங்காலில் பலமாகத் தாக்கினார்கள். அதனால் ஏற்பட்ட பாதிப்பு இன்றும்கூட என் கால்களில் இருக்கின்றது. ரைபிளில் பொருத்தப்பட்டிருந்த 'பெண்ட்'டினால் குத்தினார்கள்.

வேதனை தாங்க முடியாது நான் துடித்தேன். கத்தினேன். பின்னர் ஜீப் அங்கிருந்து புறப்பட்டபோது என் கால்களில் இருந்து இரத்தம் பெருகுவதை உணர்ந்தேன்.

இச் சந்தர்ப்பத்தில் காயம் பட்டதினால் ஏற்பட்ட தழும்புகளை சாட்சி நீதிபதியிடம் காட்டினார்.

ஜீப்பினுள் நான் கிடந்த போது சிலர் என்னை மிதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜீப்சென்றுகொண்டிருந்த போது லெப்டினன்மயாதுன்னே ஜீப்பை யாராவது வழி மறித்தால் சுட்டுவிழ்த்தும்படி ஏனைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஜீப் பலாலி இராணுவ முகாமை சென்றடைந்தபோது ஒரு இராணுவ அதிகாரி என் கால்களைப் பிடித்து வெளியில் இழுத்தார் நான் நிலத்தில் விழுந்தேன்.

நான் கால்களை நீட்டி தரையில் உட்கார்ந்திருக்கும் நிலையிலேயே கீழே விழுந்தேன். என் முதுகுப்புறம் ஜீப்பின் பின் கதவுப்பகுதி மீது சாய்ந்திருந்தது.

மாயாதுன்னே தன்னிடம் வைத்திருந்த என் நொருங்கிய மணிக் கூட்டைக் காட்டி 'இதை எனக்கு நினைவுச் சின்னமாக தருவாயா?' எனக் கேட்டார்

இரகசியப் பொலிஸார் பலர் அங்கு வந்தார்கள்.

என் கால்களிலும் கையிலும் இருந்து அதிக அளவில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் எனக்குத் தாகம் ஏற்பட்டது. நான் 'தண்ணீர்' கேட்டேன். அந்த இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் என் முகத்தில் தண்ணீரை ஊற்றினார்கள் பின் சிறிதளவு தண்ணீர் கொடுத்தார்கள். அந்த சமயத்தில் நான் மிகுந்த வேதனையால் துடித்துக்கொண்டிருந்தேன்.

பின் என்னைச் சிலர் உள்ளே தூக்கிக்கொண்டு சென்றார்கள்.


நீர்வேலி கொள்ளை, கொலை வழக்கில் நடேசுதாசன் வேறு எதிரி என ஸ்ரீலங்கா அரசினால் வர்ணிக்கப்படுகி-றார்.

வீரகேசரியிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மேலாண்மையினருக்கு மண்டியிடாமல் போராடி

வீர மரணம் அடைந்த



கி. கிருஷ்ணகுமார் 1-3-82

கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள்,
கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள்,
மீண்டும் மீண்டும் அவனைக் கொன்றனர்,

ஆனால் அவனோ உயிரோடிருக்கின்றான்,
ஆனால் அவனோ உயிர் பெற்றெழுகின்றான்,
சிந்தும் இரத்தச் சிதறல்களிலும்
உயிருடன் அவனே.

எங்கே விலங்குகள் உடைபடுகின்றதோ,
எங்கே எதிரிகள் வீழ்த்தப் படுகின்றனரோ,
அங்கே நீங்கள் அவனைக் காணலாம்
அங்கே **அவன்** உயிர் வாழ்கின்றான்.

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ் முரசு' தனது பங்களிப்பை சரிவரச்-செய்ய தமிழ்முரசினை நெறிப்படுத்துங்கள். தமிழீழ விடுதலை தொடர்பான ஆக்கங்களை முரசுக்கு எழுதி அனுப்புங்கள். விடுதலைப் பயணத்தில் உங்கள் எழுத்துக்களையும் பங்கு கொள்ளச் செய்யுங்கள். சகல தொடர்புகட்கும்...

THE EDITOR,
'TAMOUL MOURASSOU',
8, RUE CHARLES MOUREU,
PARIS - 75013
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வாசகர்களே!

பிரதி வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் நாம், "செந்தமிழ் இசை" எனும் தீந்தமிழ் நிகழ்ச்சியை, F.M. 98.2 MHz இல், மாலை 8½ முதல் 9½ மணி வரை உங்களுக்கு வழங்கிகின்றோம். எமக்கு இந் நிகழ்ச்சியை ஒலிபரப்ப ஆவன செய்வோர்

# Radio Soleil.

ஸ்தாபனத்தார்.

இல. 35, று ஸ்டிபின்ஸன் - பரிஸ் 75018.
எமது பிரத்தியேக தொலைபேசி - (ஒலிபரப்பின் போது - மட்டும்) இலக்கம் 262-14-18.

"செந்தமிழோசை" யுடன் சகல தொடர்புகட்கும்:

SENTAMILOSAI,
N° 8, RUE CHARLES MOUREU,
75013 - PARIS.
(Métro : TOLBIAC / PLACE D'ITALIE)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *


## அடிமை செய்யோம்!

எத்தனை தமிழர் இந்நாள்
ஈழத்தே மாண்டு போனார்
கத்தியில் குண்டில் வீழ்ந்த
காளையர் எத்தனை பேர்?
அத்தனை பேர் மடிந்தும்
ஆரடா தமிழனுக்குச்
சத்தூட்ட வந்தனர் நாங்கள்
சாகின்றோம் கேட்பாரில்லை!

கரிகாலன் முன் போன ஈழம் நோக்கி
காஞ்சிபுரம் சேலை மட்டும் போனால்
எரிகின்ற தமிழ் ஈழம் என்ன செய்யும்?
ஏனையா வாய் பூட்டி இருக்கின்றீர்கள்?
நரிகள் ஆளும் நாட்டில் நாங்கள் நின்றோம்!
நாள் தோறும் மடிகின்றோம்
கேட்பாரில்லை!
பெரிய தமிழ் வீரம் பேசுவீர்கள்?
பிள்ளையைக் கவனிக்க
மாட்டீர் போங்கள்

\- காசி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Army occupies Jaffna, Down with the anti-Tamil terror!** AP

ஈழத்தமிழ் மகனே!

படத்திலிருப்பது பெய்ரூத் அல்ல! சல்வதோரும் அல்ல! உன்னுடைய தமிழீத்தின் யாழ்ப்பாணம்தான்!

அங்கே ... ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசின் அட்டூழியங்கள் தொடர்கின்றன, அடக்குமுறைகள் வலுக்கின்றன!

அங்கே ... உன்னைப் பெற்றவர்கள், உனது உடன் பிறப்புக்கள், உனக்கு உற்றவர்கள் ... எவரது உயிருக்குமே உத்தரவாதமில்லை!

அங்கே ... இன்று எவரும் எந்நேரத்திலும் எக்காரணமின்றியும் சிறை செய்யப்படலாம் ... காவலில் வைக்கப்படலாம் ... கடும் சித்திரவதைக்குள்ளாகலாம் ... காணாமல் போகலாம் ... தூக்குத்தண்டனை விதிக்கப்படலாம்... மதகு ஓரங்களில் பிணங்களாக வீசப்படலாம் ...!

இந்நிலையில் ... இங்கே ... தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உனது பங்களிப்பை அளிக்காமல், வெறுமனே நீ கேளிக்கைகளில் மூழ்கிக் கிடக்கலாமோ ... ?

விழித்தெழு தமிழா! இனியாவது துடித்தெழு ...!

**வெளியீடு**

**தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org